மலர்-5 இதழ்-111 ஏப்ரல் 1-15 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்




மாதமிருமுறை

சித்திரை சிறப்புகள்

# மனம் அதிகம் சஞ்சலம் அடைகிறதா?

# பெண்களுக்கு முன்னுரிமை தரும் பெருமாள்

தொண்டை நாட்டின் 22 திவ்யதேசங்களில் முதல் திவ்யதேசமான அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோவிலை, திருக்கச்சி, அத்திகிரி என்றும் அழைக்கப்படுகிறது.

இங்குள்ள மூலவர்: பேரருளாளன், வரதராஜர், தேவாதிராஜன், தேவப் பெருமாள், அத்தியூரான். என்ற நாமத்துடனும், தாயார்: பெருந்தேவி தாயார், மஹாதேவி என்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

இத்தலத்து பெருமாள் பெண்களை மிகவும் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் கடவுளாக திகழ்கிறார்.



"தேவப்பெருமாளும் பெருந்தேவி தாயாரும் சேர்த்தி புறப்பாடு நடை பெறும் போது பெருமாளுக்கு வெள்ளி குடையும் தாயாருக்கு தங்க குடையும் சமர்பிப்பர்.

அப்போது, பெருமாள் தாயாருடன் சேர்ந்து வரும்போது தன்னை ஒரு அடி தாழ்த்திக்கொள்கிறார். மேலும் இங்கு தாயாருக்கு மட்டுமே தங்க விமானம். பெருமாளுக்கு கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது."

பெண்களுக்கு முதலுரிமை கொடுப் பதற்கு அந்த வரதனே உதாரணமாக திகழ்கிறார்.

இது வரதனுக்கு மட்டுமே உரிய சிறப்பாகும்.

# முன்ஜென்ம பாவங்களைப் போக்கும் ஆறு கோவில்கள்!

கும்பகோணம் அருகில், முன்ஜென்ம பாவங்களைப் போக்கும் முக்கிய ஆறு கோவில்கள் உள்ளன. அவை...

1. **திருபுவனம் கம்பஹரேஸ்வரர் திருக்கோவில்.**
   கடன், சத்ரு, நோய் போன்றவற்றை தீர்க்கும் சக்தி வாய்ந்தது, இந்த ஆலயம்.
2. **கும்பகோணம் நாச்சியார் கோவில் அருகில் உள்ள ராமநாதசுவாமி பர்வதவர்த்தினி அம்மன் ஆலயம்.**
   இது மாந்தி பகவான் பரிகாரத் தலம் ஆகும்.
3. **திருப்பாம்புரம் சேஷபுரீஸ்வரர் திருக்கோவில்.**
   ராகு – கேது பரிகாரத் தலம்.
4. **வைத்தீஸ்வரன் கோவில்.**
   இது செவ்வாய் பரிகார தலமாகும்.
5. **திருந்து தேவன்குடியில் உள்ள கற்கடேஸ்வரர் கோவில்.**
   இது அனைத்து முன் ஜென்ம பாவங்களையும் போக்கும் திருத்தலம் ஆகும்.
6. **திருவிடைமருதூர் மகாலிங்கம் திருக்கோவில்.**
   பிரம்மஹத்தி தோஷம் நீங்கும் ஆலயம் இது.



# உலகத்தில் உள்ள ஒரே ஒரு பாரிஜாத மரம்

ஐயாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த, உலகத்தில் உள்ள ஒரே பாரிஜாத மரம்! உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஃபைசாபாத் மண்டலத்தில் உள்ளது.

இந்தியத் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இந்த அற்புத தெய்விக மரம் உள்ளது.

பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெறுவதற்காக மேரு மலையை மத்தாகவும், வாசுகி பாம்பினை கயிறாகவும், கொண்டு அசுரர்கள் பாம்பின் தலை பகுதியிலும், தேவர்கள் வால் பகுதியிலும் நின்று இழுத்து கடைந்தார்கள். அப்பொழுது கற்பக மரம், பாரிஜாதம், ஹரிசந்தனம், சந்தனம், மந்தாரம் முதலிய ஐந்து மரங்கள் பாற்கடலிலிருந்து வெளிப்பட்டன. இவை பஞ்ச தருக்கள் என்று அழைக்கப்பெறுகின்றன.

அப்படிப்பட்ட பஞ்ச தருக்களில் பாரி ஜாத மரமும் ஒன்று. இந்திரனின் தலை நகரான அமராவதியில் இருந்த இந்த பாரி ஜாதமரம், அர்ஜுனனால் பூலோகத்திற்கு கொண்டு வரப்பட்டது என மகாபாரதம் கூறுகிறது. தனது அன்னை, குந்தியின் வேண்டுகோளுக்கு இணங்கி அர்ஜுனன் பாரிஜாத மரத்தை இந்திரலோகத்திலிருந்து கொண்டுவந்தான்; அதை, குந்திதேவி தனது பிறந்த இடமான கிண்டூர் (Kintur) என்னும் இடத்தில் நட்டதாகவும், அதில் கிடைக்கும் மலர்களை சிவ பூஜைக்குப் பயன்படுத்தியதாகவும் மகாபாரதம் கூறுகிறது. கிண்டூர், குந்தி பிறந்த இடமாதலால் அவள் பெயராலேயே வழங்கப்படுகிறது.

உத்தரப்பிரதேசமாநிலத்தில் உள்ள ஃபைசாபாத் மண்டலத்தில் உள்ள நான்கு மாவட்டங்களில் ஒன்று பாராபங்கி. இந்த பெயரிலேயே இதன் தலைநகரமும் அழைக்கப்படுகிறது. பூர்வாஞ்சல் பகுதிக்கான நுழைவாயிலாக இந்த பாராபங்கி





அமைந்திருக்கிறது.

இந்த பழம் பெருமை மிகுந்த கிண்டூரில்தான் உலகிலேயே உள்ள ஒரே பாரிஜாத மரம் உள்ளது. மகாபாரதத்தில் இந்த மரம் பற்றிய குறிப்புகள் உள்ளன. பகவான் கிருஷ்ணர், மற்றோரு பாரி ஜாத மரத்தினை, இந்திரலோகத்திலிருந்து, தமது மனைவியர் பாமா ருக்மணிக்காக கொண்டு வந்து துவாரகையில் நட்டதாகவும் மகாபாரதம் கூறுகிறது. அந்தமரம் துவாரகை கடலில் மூழ்கிய போது மூழ்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

தற்போது, உலகிலேயே இந்த பாரிஜாத மரம் மட்டுமே உள்ளது.

உலகம் முழுவதிலிருந்தும் சுற்றுலா பய ணிகள் அதிக அளவில் வருகின்றனர். இந்து மதத்தவர்கள் அதிகமான அளவில் இங்கு வந்து வழிபடுகின்றனர்; குறிப்பாக, புதுமணத் தம்பதியினர் அதிகளவில் வழிபாடும் புனித மரமாக, பாரிஜாத மரம் திகழ்கிறது.

உத்தரப்பிரதேச அரசும் தாவரவியல் அறிஞர் களும் சிறப்பு கவனம் எடுத்து, இந்த பாரிஜாத மரத்தை பாதுகாத்து வருகின்றனர்.

மத்திய அரசு இதன் சிறப்பை உணர்த்தும் விதத்தில் சிறப்பான முறையில் அஞ்சல்தலை வெளியிட்டுள்ளது. இதனால் தற்போது இந்த மரத்தின் புகழ் உலகெங்கும் பரவத் துவங்கி யுள்ளது. வெளிநாடுகளிலும் இதன் புகழ் பரவி யுள்ளது.

பாரிஜாத மரத்தைத் தரிசிக்க ஏற்ற கால மாக ஜூலை முதல் அக்டோபர் வரை என்று கூறப் படுகிறது. காரணம், அக்காலத்தில் தான் பாரிஜாத மரத்தில் மலர்கள் பூக்கும், இதனால் பாரிஜாத மரத்துடன் சேர்ந்து பாரிஜாத மலர்களையும் நம்மால் காண இயலும் என்பதால், இந்த மாதங்களில் சுற்றுலா கலை கட்டத்துவங்கியுள்ளது.

வாய்ப்பு கிடைத்தால் இந்த மரத்தின் தரிச னத்தை ஒருமுறை அனுபவித்து பாருங்கள்.

# கடவுள் வணக்கம் தேவையா



- உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து ஆறுதல் இன்றி அலைகின்றன. அறுபடை வீடுகளைத் தரிசித்தால் வாழ்வில் நிம்மதி நிலைத்திருக்கும்.
- கடவுள் வணக்கம் தேவையா? கடவுளை வணங்காமல் வாழ முடியாதா? என்றெல்லாம் சிந்திக்கிறோம். மானம் உள்ளவன் ஆடை உடுப்பான். ஆடையில்லாமல் வாழ முடியாதா என்ன! அதுபோல, மனம் உள்ளவன் கடவுளை வணங்குவான்.
- புகழை விரும்பாத நல்லவர்களின் பெயரை, கடவுளே மூன்று உலகத்தி லும் விளம்பரப்படுத்தி விடுவார்.



# திருமண தோஷம், குழந்தை பேறு, கண் நோய் குறைதீர்க்கும்

# தாயமங்கலம் முத்துமாரி அம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலைவிலும், காளையார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலைவிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவிலும் உள்ளது தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார். இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப்பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறும்.

இந்த 10 நாட்கள் கொண்ட திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும். தேரோட்டத்தின் பொழுது முத்துமாரிஅம்மன் அமர்ந்திருக்கும் தேரை அப்பகுதி வாழ் யாதவர்கள் ஓட்டிச்செல்வர். அப்பொழுது யாதவர்களுக்கு முதல் மரியாதை வழங்கப்படும்.



இத்திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது. இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங்கள் காட்சியளிக்கின்றனர். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இத் திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட் டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், 'தாய்மங்கலம்' என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே, பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய் கோயில் கொண்டிருக் கிறாள், ஸ்ரீமுத்துமாரியம்மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டுவோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடி யில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலத்து வரலாற்றுப்படி,

பன்னெடுங்காலம் முன், ராமநாதபுரத்தைச் சேர்ந்த வணிகர்கள், தங்கள் பகுதியில் விளை யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக் கம். அவர்களில் ஒருவர், மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண்டவர். அவருக்கு நெடு நாட்களாக குழந்தை இல்லை. ஒவ்வொருமுறை யும் மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும் அவ்வியாபாரி, தவறாமல் மீனாட்சியம்மையை யும், சொக்கநாதரையும் வழிபட்டு, தனது உள்ளக் குமுறலைக் கொட்டி தீர்த்துவிட்டு வரு வார்.

அப்படி ஒருநாள், மதுரையில் இருந்து ஊர் திரும்பிக்கொண்டிருந்தார் வியாபாரி. வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்தபோது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்துவிட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரியவில்லை என்றும் கூறி தேம்பினாள். "கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திர மாகப் பார்த்துக்கொள்கின்றேன்" எனக்கூறி









அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத் துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக் குழந் தையை தனக்குத் தந்ததாக எண்ணினார். ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

அவர்கள் சென்ற வழியில் ஆறு ஒன்று குறுக்கிட்டது. பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமியை கரையில் உட்கார வைத்துவிட்டு ஆற்றில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. இதனால் ரொம்பவே மனம் வெறுத்துப்போன அந்த வணிகர் தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் கூறி வருந்தினார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப்போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமையிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான் உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்து எழுந்த வியாபாரி, தன் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முதல் வேலை யாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார். இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடைவில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வ மானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக்கப் பட்டவர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் கோயி லுக்கு வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குணமாகும் என்பது இங்குள்ளமக் களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை




பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வருவதையும், பிரார்த்தனை நிறைவேறி நேர்த் திக்கடன் செலுத்துபவர்களையும் இங்கு காண லாம். மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டிலில் குழந்தையை சுமந்து வருதல், கண்மலர் காணிக்கையாக்குதல் என பல்வேறு நேர்த்தி கடன்களை பயபக்தியுடன் செய்வர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு எடுத்தும் தீச்சட்டி, பால்காவடி, சிலா குத்தல், வேல், அலகு குத்துதல், கரும்புத் தொட்டில், ஆயிரம் கண் பானை எடுத்தும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். விழா காலங் களைத் தவிர மற்ற நாட்களில் தினசரி பூஜைகள், அன்னதானம் நடைபெறுகிறது.

கண் நோய் உள்ளவர்களுக்கு இங்கு அம்மன் சன்னதியில் அபிஷேக தீர்த்தம் கொடுக்கின்றனர். கண்பிரச்சினை தீர்ந்தவுடன் கண்மலர் செலுத்தியோ அல்லது அங் கப்பிரதட்சனை செய்தோ தங்களின் நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

திருவிழாவை தொடர்ந்து பக்தர்கள் வசதிக்காக, மதுரை, கமுதி, காளையார்கோவில், பார்த்திபனூர், இளையான்குடி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து சிறப்பு பேருந்து தாயமங்கலத்திற்கு இயக் கப்பட்டு வருகிறது.


அழகுராஜா

**– முதன்மை செய்தியாளர்:**
**அழகுராஜா செல்: 9994162192**


# வடக்கு திசையில் ஏன் படுக்கக் கூடாது?
# விஞ்ஞான விளக்கம்

"அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உள்ளது" பிரபஞ்சத்தில் உள்ள எல்லா சக்திகளும் நம் உடலில் உள்ளது.

இதில் காந்த சக்தியும் அடக்கம். நம் உடலில் தொப்புளுக்கு மேலே வடக்கு திசையாகவும், தொப்புளுக்கு கீழே தெற்கு திசை யாகவும் உடல் காந்தம் வேலை செய்துவருகிறது.

ஒரே அளவுள்ள இரண்டு காந்தத்தை வடக்கு திசைகளை ஒன்று சேர்க்க முடியாது.

விலகிச்செல்லும், ஆனால் வேறு வேறு திசைகளைச் சேர்த்தால் ஒட்டிக் கொள் ளும்.




நாம் வடக்கே தலை வைத்துபடுத்தால், நம் உடலின் வடக்கு திசையும், பூமியின் வடக்கு திசையும் இணையும்போது ஒட்டுவது இல்லை.

எனவே இரவு முழுவதும் நம் காந்தத் தன்மையில் விலகும் செயல் நடக்கிறது, எனவே நிம்மதியாகத் தூங்கமுடியாது, இரத்த ஓட்டம் சீராக இருக்காது. எனவே உடலுக்கு நோய் வரும்.

எனவே வடக்கே தலை வைத்து படுக்கக் கூடாது.

தெற்கு தலை வைத்துப்படுத்தால் நம் வட திசையும் பூமியின் தெற்கு திசையும் நன்றாக ஒட்டிக்கொள்ளும்.

எனவே நிம்மதியான தூக்கம் வரும்.

எனவே தெற்கில் தலை வைத்துப்படுப்பது மிகவும் நல்லது.

"புது மாப்பிள்ளை தெற்கே தலைவைத்து படுக்கவேண்டும்" என கேரளாவில் பாட்டிமார்கள் கூறுவார்கள்.

ஏனென்றால் புது மாப்பிள்ளைகள் குறைந்த நேரமே தூங்குவார்கள், இரவில் நல்ல தூக்கம் வர வேண்டும் அல்லவா?

அதனால் தான்,

கர்ப்ப காலத்தில் குழந்தை வயிற்றில் இருக்கும்பொழுது அம்மாவின் காந்த சக்தி தொப்புளுக்கு மேலே வடக்காவும், தொப்புளுக்கு கீழே தெற்காகவும் இருக்கும். ஆனால் குழந்தைக்கு தொப்புளுக்கு மேல்பகுதி தெற்காகவும், தொப்புளுக்கு கீழ் பகுதி வடக்காவும் இருக்கும்.

இப்படி இருந்தால்தான் குழந்தையின் தலை மேல்நோக்கி இருக்க முடியும். பத்தாவது மாதத்தில் குழந்தை வெளியே வருவதற்கு சற்று முன்னால் இந்தக் காந்த நிலையில் மாற்றம் ஏற்படும்.

அதாவது குழந்தையின் தொப்புளுக்கு மேல் வடக்காவும், கிழே தெற்காகவும் மாறும். இந்த மாற்றம் ஏற்பட்ட உடனே குழந்தையின் தலைப் பகுதியான வடக்குத்திசை, அம்மாவின் தெற்குப் பகுதியான கால் பகுதியை நோக்கி திரும்பும்.

அதனால்தான் தலை திரும்புகிறது.

எனவே தயவுசெய்து வடக்கே தலை வைத்துப் படுக்ககூடாது. தெற்குத்திசை மிகவும் நல்லது.

– கீதாராணி
சென்னை – 24



# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# கன்னிராசிக்கு பரிகாரத்தலம் திருக்கழுக்குன்றம் திரிபுரசுந்தரி ஆலயம்



திருக்கழுக்குன்றத்தில் மலைமீது வேதகிரீஸ்வரரும் தாழக்கோயிலில் திரிபுரசுந்தரி அம்மனும் ஆட்சி புரிந்து வருகின்றார்கள். மதுரையைப் போன்று தாழக்கோயிலில் அம்மனுக்கே முக்கியத்துவம் தரப்படுகின்றது.

தாழக்கோயிலில் நடைபெறும் உற்சவங்கள் அம்மனுக்கே நடைபெறுகின்றன. 1290–ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் மாறவர்மன் சுந்தரபாண்டிய மன்னர் காலத்தில் கோயில் கட்டப்பட்டுள்ளது. சுமார் 6 அடி உயரத்தில் அம்மன் பத்ரபீடத்தின் மீது பத்மபீடத்தில் நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் காட்சி தருகின்றார். தலையில் கிரீடமும் மார்பில் ஸ்ரீசக்கரத்துடனும் காட்சியளிக்கின்றார்.


காஞ்சிபெரியவர் இதுவரை நான்கு ஸ்ரீசக்கரங்கள் கொடுத்துள்ளார்.

கொல்லூர் முகாம்பிகை. காஞ்சிகாமாட்சி. திருக்கழுக்குன்றம் ஸ்ரீரீதிரிபுரசுந்தரி மற்றும் திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரிக்கும் கொடுத்ததாக செவிவழி செய்தி உள்ளது.

தமிழ்நாட்டில் 7 திரிபுரசுந்தரி அம்மன் கோயில்கள் உள்ளது. அதில் முதன்மையானதும் பழமையானதும் நமது ஊர் ஸ்ரீதிரிபுரசுந்தரி அம்மனே.

அஷ்டகந்தக மூலிகைகளால் அம்மன் உருவாக்கப்பட்டதும் பழனி முருகன் சிலையை உருவாக்கிய போகர் இந்த அம்மன் சிலையை





உருவாக்கி உள்ளதாக கர்ணபரம்பரை செய்தி உள்ளது.

மூலிகைகள் கொண்டு அம்மனை உருவாக்கி உள்ளதால் வருடத்திற்கு மூன்று முறை மட்டுமே அம்மனுக்கு முழு அபிஷேகம் நடைபெறும். மற்ற நாட்களில் பாதத்திற்கு மட்டுமே அபிஷேகம் நடைபெறும். முழு அபிஷேகமானது ஒவ்வொரு வருடமும் ஆடி உத்திரம் நவராத்திரி நவமி மற்றும் பங்குனி உத்திரம் போன்ற தினங்களில் மட்டும் நடைபெறும்.

ஸ்ரீதிரிபுரசுந்தரி அம்மனை தரிசிக்கும்போது நேரில் உயிரேட்டம் உள்ளவரை பார்க்கும்எண்ணம் பக்தர்களுக்கு ஏற்படுகின்றது. அனுபவித்தவர்களுக்குதான் அதன் அருமைபுரியும். திரிபுரசுந்தரியின் உருவ அமைதியை அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி விளக்குகின்றது.

துணையும் தொழுந்தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர் பூக
கணையும் கரும்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையுந் திரிபுர சுந்தரி யாவதறிந்தினமே...

கன்னிராசிகாரர்களுக்கு இந்த தலம் பரிகாரத்தலம். ஒவ்வொரு பரிகாரத்தலத்திலும் ராசி சக்கரம் இருக்கும். இங்கும் ராசி சக்கரம்



அம்மன் சன்னதிக்கு எதிரில் மேல் விதானத்தில் இருப்பதை காணலாம்.

கன்னி ராசிக்காரர்கள் நேரம் கிடைக்கும்போது இங்கு வந்து அமர்ந்து அம்மனை வேண்டிச் சென்றால் நினைத்தது நிறைவேறும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். திருமணம் கைகூடும். அம்மனை பார்த்தவாறு ஸ்ரீவேதகிரீஸ்வரர் இருப்பது இங்கு விஷேஷமானது. அம்மன் சன்னதியில் கொடிமரம் உள்ளது. அதன் அருகில் பலிபீடமும். அம்மனை பார்த்தவாறு சிங்க யாளி சிலையும் உள்ளது.

திருக்கழுக்குன்றம் திரிபுரசுந்தரி அம்மன் சன்னதிக்கு எதிரில் கொடிமரம் அமைந்துள்ளது. கொடிமரத்திற்கு முன்னர் சிம்மயாளி அமைந்துள்ளது. அதன் எதிரில் நின்று இடதுபுறம் பார்த்தால் திரிபுரசுந்தரி அம்மனை தரிசிக்கலாம்.

சற்றே நிமிர்ந்து மலைமேலே உள்ள வேத கிரீஸ்வரரை தரிசிக்கலாம். திரிபுரசுந்தரி அம்மனையும் வேதகிரீஸ்வரரையும் ஒரே சேர கண்டு வணங்கலாம். தமிழ்நாட்டில் மட்டும் அல்ல இந்தியா விலேயே இதுபோல அம்மனையும் ஈஸ்வரரையும் ஒருசேர காணஇயலாது என அர்ச்சகர் ஒருவர் குறிப்பிட்டார். அடுத்த முறை கோயிலுக்கு சென்றால் இருவரையும் ஒருசேர தரிசித்து வாருங்கள்.

ஆடிமாதம் திரிபுரசுந்தரி அம்மனுக்கு மட்டுமே உற்சவம் நடைபெறும் திருவிழாவின் போது இங்கு கொடி ஏற்றப்படும். விதவிதமான வாகனங்களில் அம்மன் வீதிஉலா வருவார். பதினோராம் நாள் ஆடி உத்தரத்தன்று இரவு திருக்கல்யாணம்நடைபெறும். திருக்கல்யாணத்தில் இந்துமுறைப்படி மாலை மாற்றுதல். வேள்வி வளர்த்தல். தாரை வார்த்து கொடுத்தல் போன்ற சடங்குகள் நடைபெறும்.



வேலன்

திருக்கல்யாணம் முடிந்ததும் இறைவன் இறைவி திருமணக் கோலத்தல் பஞ்சமூர்த்திகள் உடன் ரிஷப வாகனத்தில் வீதி உலா வருவார்கள். வேண்டியவர்களுக்கு வேண்டியவரம் தரும் ரீதிரிபுரசுந்தரி அம்மனை தினம் நாம் தொழுவோம்.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# தமிழ் வருடப்பிறப்பு 2021

## ப்லவ வருஷத்தின் முக்கிய பண்டிகை/விரத தினங்கள்

| | |
|---|---|
| 18.04.2021 | ஞாயிறு ஸ்ரீ ராமனுஜர் ஜயந்தி |
| 21.04.2021 | புதன் ஸ்ரீராம நவமி |
| 23.04.2021 | வெள்ளி ஸர்வ ஏகாதஸி |
| 26.04.2021 | திங்கள் சித்ர பௌர்ணமி |
| 27.04.2021 | செவ்வய் ஸ்வாதி |
| 03.05.2021 | திங்கள் ச்ரவண வ்ரதம் |
| 07.05.2021 | வெள்ளி ஸர்வ ஏகாதஸி |
| 11.05.2021 | செவ்வாய் ஸர்வ அமாவாஸ்யை |
| 14.05.2021 | வெள்ளி அக்ஷய த்ருதீயை, வைகாசி மாஸப்பிறப்பு |
| 17.05.2021 | திங்கள் ஸ்ரீ சங்கர ஜயந்தி |
| 23.05.2021 | ஞாயிறு ஏகாதஸி |
| 24.05.2021 | திங்கள் ஸ்வாதி |
| 25.05.2021 | செவ்வாய் வைகாசி விஸாகம், ஸ்ரீ ந்ருசிம்ஹ ஜயந்தி |
| 31.05.2021 | திங்கள் ச்ரவண வ்ரதம் |
| 06.06.2021 | ஞாயிறு ஸர்வ ஏகாதஸி |
| 09.06.2021 | புதன் போதாயன அமாவாஸ்யை |
| 10.06.2021 | வியாழன் அமாவாஸ்யை |
| 15.06.2021 | செவ்வாய் ஆனி மாஸப்பிறப்பு |
| 21.06.2021 | திங்கள் ஸர்வ ஏகாதஸி / ஸ்வாதி |
| 27.06.2021 | ஞாயிறு ச்ரவண வ்ரதம் |
| 05.07.2021 | திங்கள் ஸர்வ ஏகாதஸி |
| 09.07.2021 | வெள்ளி ஸர்வ அமாவாஸ்யை |
| 16.07.2021 | வெள்ளி தக்ஷிணாயன புண்யகாலம் |
| 17.07.2021 | சனி ஆடிப்பண்டிகை |
| 18.07.2021 | ஞாயிறு ஸ்வாதி |
| 20.07.2021 | செவ்வாய் ஸர்வ ஏகாதஸி |
| 24.07.2021 | சனி ச்ரவண வ்ரதம் |
| 08.08.2021 | ஞாயிறு ஆடி அமாவாஸ்யை |
| 11.08.2021 | புதன் திருவாடிப்பூரம் |
| 14.08.2021 | சனி ஸ்வாதி |
| 17.08.2021 | செவ்வாய் ஆவணி மாஸப்பிறப்பு |
| 18.08.2021 | புதன் ஸர்வ ஏகாதஸி |
| 20.08.2021 | வெள்ளி வரலக்ஷ்மி வ்ரதம் |
| 21.08.2021 | சனி ரிக் உபாகர்ம, ஹயக்ரீவ ஜயந்தி, திருவோணம் பண்டிகை, ச்ரவண வ்ரதம் |
| 22.08.2021 | ஞாயிறு யஜுர் உபாகர்ம, |
| 23.08.2021 | திங்கள் காயத்ரீ ஜபம் |
| 30.08.2021 | திங்கள் கோகுலாஷ்டமி, வைகானஸ/முனித்ரய ஸ்ரீஜயந்தி |
| 31.08.2021 | செவ்வாய் பாஞ்சராத்ர / ஸ்ரீமடம் ஸ்ரீஜயந்தி |
| 03.09.2021 | வெள்ளி ஸர்வ ஏகாதஸி |
| 06.09.2021 | திங்கள் ஸர்வ அமாவாஸ்யை |
| 09.09.2021 | வியாழன் ஸாம உபகர்ம (குஜ சாந்தி) |
| 10.09.2021 | வெள்ளி விநாயகர் சதுர்த்தி |
| 11.09.2021 | சனி ஸ்வாதி |
| 17.09.2021 | வெள்ளி புரட்டாசி மாஸப்பிறப்பு, ஸர்வ ஏகாதஸி, ச்ரவண வ்ரதம் |
| 21.09.2021 | செவ்வாய் மஹாளய பக்ஷம் ஆரம்பம் |
| 24.09.2021 | வெள்ளி மஹாபரணி |
| 29.09.2021 | புதன் மத்யாஷ்டமி |
| 02.10.2021 | சனி ஸர்வ ஏகாதஸி |
| 05.10.2021 | செவ்வாய் போதாயன அமாவாஸ்யை |
| 06.10.2021 | புதன் மஹாளய அமாவாஸ்யை |
| 07.10.2021 | வியாழன் நவராத்ரி பூஜா ஆரம்பம் |
| 14.10.2021 | வியாழன் மஹா நவமி, ஸரஸ்வதி பூஜை |
| 15.10.2021 | வெள்ளி விஜயதஸமி, ச்ரவண வ்ரதம், ஸ்ரீ வேதாந்த தேஸிகர் திருநக்ஷத்ரம் |
| 16.10.2021 | சனி ஸர்வ ஏகாதஸி |

| | |
|---|---|
| 17.10.2021 | ஞாயிறு துலா விஷு புண்யகாலம் |
| 18.10.2021 | திங்கள் துலா ஸ்நானம் ஆரம்பம் |
| 01.11.2021 | திங்கள் ஸர்வ ஏகாதஸி |
| 03.11.2021 | புதன் பின்னிரவு நரக சதுர்த்தஸி |
| 04.11.2021 | வியாழன் ஸர்வ அமாவாஸை, தீபாவளி பண்டிகை, லக்ஷ்மி குபேர பூஜை |
| 08.11.2021 | திங்கள் மணவாள மாமுநிகள் திருநக்ஷத்ரம் |
| 11.11.2021 | வியாழன் ச்ரவண வ்ரதம் |
| 15.11.2021 | திங்கள் ஸர்வ ஏகாதசி |
| 16.11.2021 | செவ்வாய் கடைமுகம், துலா ஸ்நான பூர்த்தி, கார்த்திகை மாஸப்பிறப்பு |
| 17.11.2021 | புதன் முடவன் முழுக்கு |
| 18.11.2021 | வியாழன் வைகானஸ தீபம் |
| 19.11.2021 | வெள்ளி பாஞ்சராத்ர/ஸ்ரீமடம் திருக்கார்த்திகை தீபம் |
| 30.11.2021 | செவ்வாய் ஸர்வ ஏகாதஸி |
| 02.12.2021 | வியாழன் ஸ்வாதி |
| 03.12.2021 | வெள்ளி போதாயன அமாவாஸ்யை |
| 04.12.2021 | சனி அமாவாஸ்யை |
| 08.12.2021 | புதன் ச்ரவண வ்ரதம் |
| 14.12.2021 | செவ்வாய் ஸர்வ ஏகாதஸி (ஸ்ரீரங்கம் கோயில் வைகுண்ட ஏகாதஸி) |
| 16.12.2021 | வியாழன் மார்கழி மாஸப்பிறப்பு, தனுர் மாத பூஜாரம்பம் |
| 29.12.2021 | புதன் ஸ்வாதி |
| 30.12.2021 | வியாழன் ஸர்வ ஏகாதஸி |
| 02.01.2022 | ஞாயிறு ஸர்வ அமாவாஸ்யை, ஹனுமத் ஜயந்தி |
| 05.01.2022 | புதன் ச்ரவண வ்ரதம் |
| 11.01.2022 | செவ்வாய் கூடாரைவல்லி |
| 13.01.2022 | வியாழன் வைகுண்ட ஏகாதஸி (கோயில் தவிர), – போகிப்பண்டிகை |
| 14.01.2022 | வெள்ளி தை மாஸபிறப்பு, உத்தராயண புண்யகாலம், மகர ஸங்க்ராந்தி, பொங்கல் பண்டிகை பொங்கல் பானை வைக்க நல்ல நேரம் பகல் 1.45 – 2.30 PM (IST) உத்தமம். |
| 15.01.2022 | சனி கனு, மாட்டுப்பொங்கல் |
| 25.01.2022 | செவ்வாய் ஸ்வாதி |
| 31.01.2022 | திங்கள் ஸர்வ தை அமாவாஸ்யை |
| 01.02.2022 | செவ்வாய் ச்ரவண வ்ரதம் |
| 08.02.2022 | செவ்வாய் ரத ஸப்தமி |
| 12.02.2022 | சனி ஸர்வ ஏகாதஸி |
| 13.02.2022 | ஞாயிறு மாசி மாஸப்பிறப்பு |
| 17.02.2022 | வியாழன் மாசி மகம் |
| 22.02.2022 | செவ்வாய் ஸ்வாதி |
| 24.02.2022 | வியாழன் அஷ்டகா |
| 25.02.2022 | வெள்ளி அன்வஷ்டகா |
| 27.02.2022 | ஞாயிறு ஏகாதஸி |
| 28.02.2022 | திங்கள் ச்ரவண வ்ரதம் |
| 02.03.2022 | புதன் ஸர்வ அமாவாஸ்யை |
| 14.03.2022 | திங்கள் ஸர்வ ஏகாதசி, காரடையார் நோன்பு, பங்குனி மாஸப்பிறப்பு இரவு 8 மணிக்குமேல் 8.45க்குள். |
| 18.03.2022 | வெள்ளி பங்குனி உத்திரம் |
| 21.03.2022 | திங்கள் ஸ்வாதி |
| 28.03.2022 | திங்கள் ஸர்வ ஏகாதஸி, ச்ரவண வ்ரதம் |
| 31.03.2022 | வியாழன் ஸர்வ அமாவாஸ்யை |
| 02.04.2022 | சனி யுகாதிப்பண்டிகை, தெலுங்கு வருஷப்பிறப்பு |
| 10.04.2023 | ஞாயிறு ஸ்ரீராம நவமி |
| 12.04.2022 | செவ்வாய் ஸர்வ ஏகாதஸி |
| 14.04.2022 | வியாழன் சுபகிருது தமிழ் வருஷப்பிறப்பு |

www.aanmeegamalar.com

தொகுப்பு:
புனிதவேல்
தொடர்பு எண்:
9841807572



புனிதவேல்

# ராசி பலன்கள்

## 01.04.2021 முதல் 15.04.2021 வரை

### மேஷம் ராசி அன்பர்களே உங்களுக்கு




உங்களுடைய முயற்சிகள் வெற்றியை தேடிதரும் மாதமாக இந்த மாதம் அமையும் பொருளாதாரம் மேம்படும். பணவரவு சீராக இருக்கும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும்.வெளிநாடு வேலை வாய்புகள் உண்டாகும்.ஆரோக்கியம் மேம்படும் குடும்ப உறவுகளில் விரிசல்கள் எற்படும் தாயார் உடல்நிலை பாதிக்கப்படும் மானவர்களுக்கு படிப்பில் மந்த நிலை உண்டாகும்.வெளியூர் பயணங்களை தவிர்த்து கொள்வது நல்லது வழக் குகளில் வெற்றிகள் உண்டாகும் நீண்டநாட்களாக வரவேண்டிய பணம் வந்து சேரும்

### ரிஷபம் ராசி அன்பர்களே உங்களுக்கு



வெளியூர் பயணங்கள் மூலம் சிரமங்கள் எற்படும் குடும்ப உறவுகளால் மகிழ்ச்சிகள் உண்டாகும் உங்களுடைய பேச்சு திறமையால் தொழில் முன்னேற்றம் அடையும் லாபங்கள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டாகும் புதிய தொழிலுக்காக கடன் வாங்கும் நிலமை உண்டாகும் தந்தையின் உடல் நலனில் கவணம் தேவை செய்யும் வேலையில் மாற்றங்கள் உண்டாகும் உடல் நிலைசீராக இருக்கும் வீன் செலவுகளை குறைத்து கொள்வது நல்லது வீடு,வாகன சேர்க்கை உண்டாகும் சொத்து பிரச்சனைகள் முடிவுக்கு வரும்

### மிதுனம் ராசி அன்பர்களே உங்களுக்கு



பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும் பணவரவு சீராக இருக்கும் உங்களுடைய முயற்சிகளில் வெற்றிகள் உண்டாகும் வாகன சேர்க்கை உண்டாகும் மலை கோவில்களுக்கு சென்று வருவீர்கள் சாகசபயணங்களில் அதிக கவணம் தேவை ஆரோக்கிய விஷயங்களில் கவணம் தேவை தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் உண்டாகும் புதிய வீடு,மனை வாங்குவீர்கள் மானவர்கள் படிப்பில் நல்ல மதிப்பெண்கள் பெறுவீர்கள் சுய தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.வெளியூர் பயணங்களை தவிர்ப்பது நல்லது.

### கடகம் ராசி அன்பர்களே உங்களுக்கு



குடும்பத்துடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள் குடும்ப உறவுகளால் மகிழ்ச்சிகள் உண்டாகும் முயற்சிகளில் தொய்வு ஏற்படும் வாகனங்களில் செல்லும்போது அதிக கவணம் தேவை மானவர்களுக்கு படிப்பில் மந்த நிலை உண்டாகும் சொத்துபிரச்னைகளில் இழுபறி நிலைஉண்டாகும்.மனைவியின் உடல் நலனில் கவணம் தேவை.முதலீடுகளில் அதிக கவணம் தேவை.தெய்வ வழிபாடு அதிகரிக்கும்.புது புது திட்டங்களால் தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும்.லாட்டரி யோகம் உண்டு திடீர் அதிர்ஷ்டம் எற்படும்.

### சிம்மம் ராசி அன்பர்களே உங்களுக்கு



இந்தமாத தொடக்கத்தில் உங்களுடைய திட் டங்களில் அதிக கவணம் தேவை. மனைவியின் மூலம் ஆதாயம் அதிகரிக்கும்.கூட்டு தொழிலால் லாபங்கள் உண்டாகும்.சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.திருமண பேச்சுவார்தைகள் மகிழ்ச்சியை தரும்.திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும். தொழிலில் தந்தையின் ஆதரவு அதிகரிக்கும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். மானவர்களுக்கு படிப்பில் இருந்த மந்த நிலை விலகும்.குழந்தைகளால் மனகஷ்டங்கள் ஏற்படும். அரசாங்க விஷயங்களில் கவணம் தேவை.

### கன்னி ராசி அன்பர்களே உங்களுக்கு



இந்த மாதம் விரயங்கள் அதிகம் உண்டாகும். தொழிலுக்காக கடன் வாங்குவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.குடும்ப உறவுகளில் விரிசல்கள் உண்டா கும். வெளிநாடு முயற்சிகள்வெற்றியை தேடிதரும். குழந்தைகள் மூலம் செலவுகள் அதிகரிக்கும். மனைவி மூலம் சுபசெலவுகள்உண் டாகும். தந்தையுடனான வீண் வாக்குவாதங் களை தவிர்ப்பது நல்லது. சகஊழியர்களிடம் தன்மையாக நடந்துகொள்ளுங்கள். லாபங்கள்

www.aanmeegamalar.com

குறைந்த அளவில் இருக்கும். முன் னோர்கள் வழிபாடு செய்வது நன்மை தரும்.

### துலாம் ராசி அன்பர்களே உங்களுக்கு



இந்த மாதம் நீங்கள் குலதெய்வ கோவிலுக்கு சென்று வருவீர்கள். குழந்தை களால் மகிழ்ச்சிகள் உண்டாகும். திடீர் பணவரவு ஏற்படும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குடும்பதில்சில குழப்பங்கள் உண்டாகும். பேசும் போது அதிக கவனத்துடன் பேச வேண்டும். மகிழ்ச்சிகள் அதிகரிக்கும். மனைவியிடம் கருத்து வேறுபாடுகளை குறைத்து கொள்வது நல்லது. ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும். தொழிலில் அதிக கவனம் தேவை. போட்டிகள் அதிகரிக்கும். வெளியூர் பயணங் களை மேற்கொள்வீர்கள்.

### விருச்சிகம் ராசி அன்பர்களே உங்களுக்கு



திருமணம் கைகூடும் உங்களுடைய முயற் சிகள் வெற்றியை தேடி தரும். வாகன சேர்க்கை ஏற்படும். தாயார் உடல் நலனில் அதிக கவனம் தேவை. மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் உண்டாகும். சுப நிகழ்ச்சிகள் நடை பெறும். தெய்வ அனுகூலம் உண்டாகும். தொழி லில் நல்ல லாபம் கிடைக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். சேமிப்புகள் அதிகரிக்கும். முதலீடுகளில் அதிக கவனம் தேவை. உறவினர்கள் ஒன்று கூடி மகிழ்வீர்கள். சிவவழிபாடு நன்மையை தரும்

### தனுசு ராசி அன்பர்களே உங்களுக்கு



உங்களுக்கு இந்த மாதம் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். கூட்டு முயற்சிகள் வெற்றியை தரும். தந்தையின் சொத்துக்களால் ஆதா யம் உண்டாகும். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.தொழிலில் புது முயற்சிகள் வெற்றியை தரும். லாபங்கள் அதிகரிக்கும். சேமிப்பு அதிகரிக்கும். உடல் நல னில் அதிக கவனம் தேவை. ஸ்ரீ சுப்ரமணியர் வழிபாடு நன்மையை தரும். மனைவி மூலம் ஆதாயம் உண்டாகும். வெளியூர் பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

### மகரம் ராசி அன்பர்களே உங்களுக்கு



குழந்தைகளால் மகிழ்ச்சிகள் உண் டாகும். உங்களுடைய முயற்சிகளில் தொய்வு ஏற்படும். செலவுகள் அதி கரிக்கும். மாணவர்களுக்கு கவன குறைவு அதிகரிக்கும். உங்களுடைய



ஜெய் ஸ்ரீராம்

குறிக்கோளில்முழு கவனத்துடன்செயல் படுங்கள்தடைகளை தகர்த்து வெற்றி யை நிலை நாட்டுவீர் கள். பூர்வீக சொத் துக்களால் பிரச் சனை கள் உண்டாகும் குல தெய்வ வழிபாடு நன்மையைதரும். வெளியூர் பயணங் களை குறைத்து கொள்வது நல்லது. திருமண பேச்சுவார்தைகள் மகிழ்சியை தரும். தொழில்போட்டிகள் உண்டாகும். தொழிலில் நல்ல லாபம் உண் டாகும்.பேச்சு சாதுர்யம் அதி கரிக்கும்.

### கும்பம் ராசி அன்பர்களே உங்களுக்கு



மனைவி மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சிகள் உண்டாகும். நீண்ட நாட்களாக குழந்தை வரம் வேண்டி காத்திருந்தவர்கலுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். சுப செலவுகள் உண்டாகும். உறவினர்களின் வருகை மகிழ்ச் சியை தரும். வாகன சேர்க்கை ஏற்படும். திருமண முயற்சிகளில் உள்ள வர்களுக்கு திருமணம் கைகூடும்.வாகனங்களில் செல்லும்போது அதிக கவனம் தேவை. தொழிலில் நல்ல லாபம் உண்டாகும். மலைமேல் உள்ள அம்மன் கோவில் வழிபாடு நன்மையை தரும். மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் பெருவார்கள்.

### மீனம் ராசி அன்பர்களே உங்களுக்கு



போட்டி தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள், பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். உங்களு டைய முயற்சிகள் வெற்றியை தேடி தரும்.மானவர்களுக்கு படிப்பில் கவனக்குறைபாடு அதிகரிக்கும்.புதிய வாகனம் மற்றும் வீடு வாங்குவதில் முதலீடு செய்வீர்கள்.குழந்தை வரம் வேண்டி இருப்பவர்களுக்கு குழந்தை பாக்கியம் ஏற்படும். மனைவி மூலம் செலவீனங்கள்அதி கரிக்கும். வெளியூர் பயணங்களைதவிர்ப்பது. நல்லது.முன்னோர்கள்வழிபாடு நன்மையை தரும். சுய தொழில் மூலம் லாபங்கள் அதிகரிக்கும். வேலையாட்களிடையே கவனமாக இருக்கவும். உடல் நலனில் கவணம் தேவை.

ஜோதிடர் ஜெய் ஸ்ரீராம்
DME.,BA.,MA.,(ASTROLOGY)
மயிலாடுதுறை CELL 9487215736

# காட்டை சார்ந்த கடவுள்கள்

கடவுள் உருவாக்கிய மதம்

வேதத்தில் பெருவாரியாக குறிப்பிடபடாமல் இந்து மதத்தில் முக்கியமாக கருதப்படும் தெய்வங்கள் அனைத்துமே காடுகளோடும் வேட்டையாடுவதோடும் தொடர்புடையதாக இருக்கிறது. அதே நேரம் சைவ சமய பிவுகளில் காட்டப்படும் முக்கிய தெய்வங்கள் அனைத்தும் வேத தெய்வங்களோடு சம்பந்தப்படாதவைகளாக இருக்கிறது அதனால் இத்தகைய தெய்வங்கள் இந்தியாவின் ஆதி குடிகளின் தெய்வமென்றும் அவைகளை பிற்காலத்தில் வேத சமூகம் தமதாக்கி கொண்டிருக்கின்றன என்பதும் தெளி வாகிறது.

அத்தகைய ஆதி தேவதைகளில் மிக முக்கியமானது காளி அல்லது துர்க்கை, ஐயப்பன் அல்லது சாஸ்தா என்ற இரண்டு தேவதை களையும் தனித்து சுட்டிக் காட்டலாம்.



சாஸ்தா எனும் ஐயப்பன் சிவனுக்கும் திருபாற்கடலை கடைந்த போது உருவான அமிர்தத்தை பகிர்ந்த போது உருவான மாயை என்ற விஷ்ணுவுக்கும் பிறந்ததாக கருதப்படுகிறது. தென்னிந்தியாவில் சாஸ்தா தெய்வங்கள் இருக்கும் பகுதிகளை காவு என்ற பெயரில் இன்றும் அழைக்கப்படுவதை காணலாம். காவு என்ற வார்த்தைக்கு காடுகள் அல்லது சோலைகள் என்ற பொருளை சொல்லலாம். அதா வது காட்டுப் புறத்திலும் சோலை வனங்களிலும் சாஸ்தா வணங்கப்பட்டதாக சொல்லலாம். இன்று கூட திருநெல்வேலியின் எல்லை கிரமமாக இருக்கும் காரிக் கோயில் என்ற ஊரில் பூமிக்கு அடியில் கடலோரத்தில் உள்ள சாஸ்தா கோயில் காரி சாஸ்தா அல்லது காவு சாஸ்தா என்று அழைக்கப்படுவதை காணலாம்.

புலிப்பால் கொண்டு வர சாஸ்தா அனுப்பப்பட்டதும் எருது முக அரக்கனோடு காளி தேவி சண்டையிட்டதும் சாஸ்தா, காளி ஆகிய இரு தெய்வங்கள் காடுசார்ந்த சமய

www.aanmeega

வளர்ச்சியால் உருவானவைகள் என்பதை நமக்கு சொல்லாமல் சொல் லும். இந்த இரு தெய்வங்களும் வேதங்களால் ஆரம்பத்தில் சிறப்பித்து கூறப்படவில்லை என்பதிலிருந்தும் இவைகள் தென்னிந்திய சாயலில் வர்ணிக்கபடுவதிலிருந்தும் வேதங்க ளுக்கு முற்பட்டே இத்தெய்வ வழிபாடு கள் நமது நாட்டில் இருந்திருப்பது நன்கு புலனாகும்.

இத்தகைய வேதம் சாராத அல்லது வேதங்களுக்கு முற்பட்ட சமய வளர்ச்சியின் கூறுகள் வேத சிந்தனைகளுக்கு செரிவூட்டி இருப் பதை யாரும் மறுக்க முடியாது. இத்தகைய சமய பங்களிப்பு வேதங்களில் புரட்சி கரமான மாறுதலை ஏற்படுத்தியது என்றே சொல்லலாம். வேத நாகரீகம் என்பது வைதீக சடங்குகளையும் யாகங்களில் சோமரசத்தை அளிப்பதையுமே முக்கியமானதாக இருந்தது.

வேதத்தின் மூலப்பாடங்கள் இம்மாதிரி சடங்குகளில் மிக நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தாலும் கடவுளை ஆத்மாவை சீர்தூக்கி சிந்தித்து பார்க்கும் தன்மையை முற்றிலுமாக கருத்தில் கொள்ளவில்லை என்று சொல்லி விட முடியாது. ரிக் வேத ரிஷிகளில் பலர் கடவுளோடு ஒன்றுபடும் உணர்வுகளை துல்லியமாக பெற்றிருந்தனர் என்பது தெரிகிறது. ஆனால் புலன் கடந்த உணர்வுகளை யோக மார்க்கத்தில் பெறுவதை வேதங்கள் தனக்கு முன்பிருந்த மக்களிடமிருந்தே பெற்றிருக்க வேண்டும்.

கடவுளுக்கு உருவம் கொடுத்து வழிபடுவது என்பதே மனதை ஒரு நிலை படுத்தும் யோக மார்க்கத்திற்கு ஒரு எளிய வழியாகும். இந்த உருவ வழிபாட்டு முறையை வேதங்கள் சிறப்பித்து கூறவில்லை. யாகங்கள் செய்வதையும்வேறு சில சடங்கு முறை செய்வதையுமே வேதங்கள் வலி யுறுத்தி கூறுகின்றன. ஆனால் வேதகாலத்திற்கு முற்பட்ட இந்திய சமூகம் உருவ வழிபாட்டை குறிப்பாக லிங்க வழிபாடு சிவ வழிபாடு ஆகியவைகளை ஆழமாக கொண்டிருந்தனர். இந்த ஆழமான உருவ வழிபாடு வேதங்களில் அவ்வளவாக வற்புறுத்த படாததை பார்க்கின்ற போது அது மிகவும் காலம் தாழ்ந்து வேதங்களில் சேர்க்கபட்டிருப்பது புலனாகும். இதனாலும் உருவ வழிபாடுடைய இந்து மதம் வேதகாலத்திற்கு முற்பட்டது என்பது உறுதியாகும்.



யோகி ஸ்ரீ
ராமானந்த குரு

பராக்கிரம் பொறுந்திய செயற்கய செயல்களை புரிந்த மனிதர்களை தெய்வ நிலைக்கு உயர்த்திவழிபடும் வழக்கம் வேதகாலத்தில் இல்லை.

ஆனால் சிந்து வெளியில் கிடைக்கின்ற சில முத்திரை சித்திரங் களில்மனிதனை தெய்வமாக வழி படும் தன்மை இருந்திருப்பதாக அறிய முடிகிறது. இந்த தன்மையே பிற்காலத்தில் மக்களை காப்பாற்ற கடவுள் மனிதனாக இறங்கிவரும் அவதாரக் கொள்கையாக வேதங் களில் பேசப்படுகிறது.

இதற்கு உதாரணமாக அங்கிரஸ் என்ற மகரிஷியின் வாழ்க்கை விபரம் வேதத்தில் கூறப்பட்டதிலிருந்து அறிந்து கொள்ளலாம். பகவான் விஸ்ணு அவதாரங்கள் பல எடுத்திருந்தாலும் அந்த அவதாரங்கள் எல்லாமே வேதங்களில் விவரிக்கப் படவில்லை. அண்ட சராசரங்கள் அனைத்தையும் மூன்று அடிகளால் அளந்த வாமன அவதாரத்தை பற்றிய சிறு குறிப்பும் வராக அவதாரத்தை பற்றிய சிறு குறிப்புகளுமே வேதத்தில் காணப்படுகிறது. ஆகவே இந்து மதத்திலுள்ள அவதாரக் கொள்கை என்பது வேதகாலத்திற்கு முற்பட்டதாகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

வேதத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களுக்கு தனித்தன்மையும் தனி உருவமும் இல்லை. அதாவது தேவதைகளை அருவமாக வழிபடுவதே வேத மரபாகும். அதனால் வேதக் கடவுளான இந் திரன், வருணன், வாயு, அக்னி இவைகளுக்கு தனிப்பட்ட வகையில் எந்த உருவமும் ஆதி யில் கொடுக்கப்படவில்லை.

இன்று சிலை வடிவங்களால் காட்சி அளிக் கும் அந்த தெய்வ உருவங்கள் மிக சமீப காலத்தி லேயே உருவாக்கப்பட்டது ஆகும். ஆனால் சிவ னுக்கும் அம்பிகைக்கும் கொடுக்கப்பட்டுள்ள உருவங்கள் வேதத்திற்கு மிகவும் முற்பட்ட உருவங்கள் ஆகும். அது மட்டுமல்ல வேதங்கள் ஆலைய வழிபாட்டை வலியுறுத்தவே இல்லை. தனிதனி குழுக்களாகவோ அல்லது சமுதாய கூட்டங்களாகவோ மனிதர்கள் ஒருங்கிணைந்து வேள்விச் சடங்கை செய்யச் சொல்லி தான் வேதங் கள் வற்புறுத்துகின்றன. ஆனால் பூர்வ கால இந் திய மக்கள் உருவ வழிபாட்டை முதன்மையாக கொண்டவர்களாகவும் வழிபாட்டுக்கு என்று தனி இடத்தை தேர்ந்தெடுத்து செய்பவர்களாகவும்

www.aanmeegamalar.com

இருந்திருக்கிறார்கள்.




ஆதிகால மக்கள்ஆலய வழி பாட்டை மேற் கொண்டவர்க ளாக இருந்தாலும்கூடபின்னர் வந்த வேதகால கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அவர்கள் ஆலய வழிபாட்டை கைவிட்டு விட்ட னர் என்றே தோன்றுகிறது.

இதனால் தான் ராமாயணத்திலும், மகாபாரதத்திலும் மற்றுமுள்ள பழைய புராணங்களிலும் ஆலயங்களை மன்னர்கள் புதிதாக உருவாக்கியதாகவோ மக்கள் அதில் சென்று வழிபாடு நடத்தியதாகவோ எந்த குறிப்பும் இடம் பெறவில்லை.

இதை விட முக்கியமான இன்னொரு ஆதாரம் உள்ளது. அது சிந்து நதி பள்ளத்தாக்கு நாகரீகத்தில் மிகத் தெளிவாகக் காணும் வேதத் தொடர்பில்லாத தன்மையை நமக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் எடுத்து காட்டுகிறது. அதாவது இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறையாகும். இந்தியாவின் பூர்வ குடிகள் தெற்கே வாழ்ந்த போதும் சரி வடக்கே நகர்ந்த போதும் சரி இறந்தவர்களை தாழிகளில் வைத்து புதைக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். எப்பொழுதுமே அவர்கள் இறந்த உடல்களை எரித்துவிடவில்லை. புதைத்தே வைத்தனர். ஏன் அப்படி அவர்கள் செய்தார்கள் என்பதில் ஒரு உண்மை தெளிவாக ஒளி ந்து கிடக்கிறது.

ஆதிகால மக்கள் உடலைவிட்டு உயிர் பிரிந் ததும் உயிரின் வேலை முடிந்து விடுவதாக கருதவில்லை. உலகை விட்டு சென்ற உயிர் மீண்டும் பூமிக்கு திரும்பி வரும் என்று அவர்கள் நம்பினார்கள். அப்படி வருகின்ற போது உயிர்கள் வாழ்வதற்கு உடல்கள் தேவை என்பதினால் அந்த உடலை எரிக்காமல் புதைத்து வைப்பதே சிறந்த வழி என்று கருதினார்கள்.

இன்று கூட ஆன்மீக உயர் நிலையை அடைந்த ஞானிகளின் உடலை எரிக்காமல் புதைப்பதும் அந்த நம்பிக்கையினால் தான். வேதங்களை நெறியாகக் கொண்ட மக்கள் உடல்களை புதைப்பது இல்லை எரித்து விடு வார்கள். ஏன் என்றால் வேதங்கள் உயிர்களின் மறு வருகையை பற்றி எதுவும் கூறவில்லை.

வேதங்கள் மறுபிறப்பை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றாலும் இந்து மதத்தின் ஆதாரக் கொள்கையாக இருப்பது மறுபிறப்பு கொள்கையாகும். வேத காலத்திற்கு முற்பட்டகாலத்திலிருந்தே மறு பிறப்பு பற்றிய சிந்தனைகள் இந்து மக்களிடையே ஆழமாக வேறூன்றி இருப்பதனால் இந்து மதம் வேதக் கொள்கைகளை தனக்கு ஆதாரமாக கொண்டிருந்தாலும் கூட வேதம் சாராத கொள்கை களையும் தனக்குள் அடக்கி இன்று வரை நிலைத்து வருகிறது.

இங்கு நாம் வேதத்தில் இல்லாத கருத்துக்களும் நடை முறைகளும் இந்து மதத்தில் இருக்கிறது என்று சொல்வது வேதம் வேறு இந்து மதம் வேறு என்று சொல்வதற்காகவோ வேதங்களை குறைத்து மதிப்பிடுவதற்காகவோ அல்ல. இந்து மதம் என்பது வேதத்தை விட தொன்மையானது மனித சமூகத்தன் முதல் மதமாக இருப்பது என்பதை நிலை நிறுத்தி காட்டுவதற்காகத் தான். சரித்திர ஆசியர்கள் குறிப்பிடுவது போல் வேதகால மக்கள் வெளியிலிருந்து உள்ளுக்குள் வந்தவர்களாக இருந்தாலும் திருமண பந்தங்கள் மூலமாக உள்ளூர் மக்களோடு இரண்டற கலந்து விட்டதனால் எப்படி அவர்களும் இந்தியாவின் பூர்வ குடிகளாக இருக்கிறார்களோ அதேபோன்றே பூர்வ குடிகளின் கருத்துக்கள் வேதங்களில் கலந்து வேதங்களை இந்து மதத்தின் ஆதாரங்களாக ஆக்கி கொண்டது. பூர்வ சிந்தனைகளும் வேத சிந்தனைகளும் கலந்து காலங்கள் பல கடந்து விட்டதனால் வேத காலத்திலிருந்து தான் இந்து மதம் தோன்றியிருக்கலாம் என்று நாம் தவறுதலாக கருதிவருகிறோம் உண்மை நிலை முன்பே இருந்த மதத்தில் வேதங்கள் கலந்து அதை செழுமை உடையதாக்கியது என்பதாகும்..



**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**


மேலும் தொடர்பு கொள்ளவும்
**போன்: 09442426434**

# இறைத் தொடர்புதான் இறுதியான பாதுகாப்பு

103
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

அன்பு குருதேவர் அருளுகிறார்: "உடல் ரீதியான குணப்படுத்தும் முறைகளை நீங்கள் பின்பற்றினாலும் உங்கள் முழுநம்பிக்கையும் அம்முறைகளின் மீது வைக்காமல், மாறாக அவற்றின் பின்னாலுள்ள இறைவனது சக்தியின் மேல் வைய்யுங்கள். உங்கள் விரலில் வெட்டுக்காயம் இருந்தால், அதன் மீது அயோடினை தடவுங்கள். ஆனால், "இறைவா, நான் மருந்தைச் சார்ந்திராது, எனது மனோ சக்தியில் மட்டுமே நம்பிக்கைகொள்ள உதவுவாயாக", என உள்ளுக்குள் பிரார்த்தியுங்கள். அந்த மனோ நிலையை அடைவது எங்ஙனம் என உங்களுக்குக் கற்பிக்கப்படவில்லை. அது மன ஆற்றலை பயிற்சி செய்வதாலும், தியானத்தின் மூலம் மனதை இறைவனுடன் இசைவுறச் செய்வதாலும் ஏற்படுகின்றது. இவ்வாறாக நீங்கள் சடப்பொருளையும் உடல் சார்ந்த பரிகாரங்களையும் நிராகரிக்க முயலும்முன்பு, மனதின்மீது முழு ஆதிக்கத்தைப் பெற வேண்டும். அதுவரையிலும் தேகத்திற்கு உதவ பொது அறிவிற்கேற்ப முயற்சிகளை எடுப்பது மிகவும் நல்லது. நீங்கள் நஞ்சை அருந்தி அதனால் பாதிக்கப்படாமல் இருக்கமுடியுமானால், நீங்கள் உரிமையுடன் சடப்பொருளை மறுத்து மனம்தான் சகலமும் என்று கூற முடியும். முதலில் நீங்கள் அந்த மனநிலையை அடைய வேண்டும்."

"உங்களுடைய அனைத்து கவலைகளையும் துன்பங்களையும் அடியோடு ஒழிக்கக்கூடிய, வெல்ல முடியாத ஆயுதத்தை இறைவன் உங்களுக்கு அருளுகின்றான். அது இறை தொடர்பு மூலம் ஏற்படும் ஞானம், நோய், ஏமாற்றங்கள், அழிவுகள் ஆகியவற்றை வெல்வதற்கான மிக சுலபமான வழி, இறைவனுடன் இடையறாது இசைந்திருப்பதே."

"நாம் வாழ்க்கையெனும் வனத்தில் வெறும் குழந்தைகளே; நமது சொந்த அனுபவங்களாலும் தொல்லைகளாலும் நோய் மற்றும் தீய பழக்கங்களாகிய படுகுழியிகளில் தடுக்கி விழுந்து கற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தப்படுகிறோம். உதவியை வேண்டி நாம் மீண்டும், மீண்டும் குரலெழுப்ப வேண்டும். ஆனால் மாபெரும் உதவி, மெய்ப்பொருளுடன் இசைவுபடுவதிலிருந்து வருகிறது. "

அவர் மேலும் தொடர்கிறார்: "நீங்கள் தொல்லையில் சிக்கும் போதெல்லாம் பிரார்த்தியுங்கள்: "இறைவா, என்னுள்ளும் என்னைச் சுற்றிலும் நீ உள்ளாய். நான் உந்தன் சன்னிதானக் கோட்டையினுள் உள்ளேன். பலவித பயங்கரமான பகைவர்களால் நான் சூழப்பட்டு வாழ்வினூடே போராடிக்கொண்டுள்ளேன். அவர்கள் உண்மையான என் அழிவிற்கான முகவர் கள் அல்ல என்பதை நான் இப்பொழுது காண்கிறேன். எனது சக்தியை சோதிப்பதற்காக நீ என்னை இப்பூலகில் கொண்டு வந்துள்ளாய். நான் என்னை நிரூபிப்பதற்காகவே இந்த சோதனைகளை அனுபவிக்கின்றேன். என்னைச் சூழ்ந்துள்ள தீமைகளை எதிர்த்துப்போராட நான் தைரியமாக உள்ளேன். உனது சன்னிதானத்தின் எல்லாம் வல்ல சக்தியின் மூலம் அவற்றை முற்றிலும் அழிப்பேன். இவ்வாழ்க் கை சாகசத்தை நான் கடந்து விட்டவுடன் நான் கூறுவேன்: "இறைவா, தைரியமாக இருந்து போராடுவது மிகவும் கடினமாக இருந்தது; ஆனால் எனது பயம் எவ்வளவு அதிகமாயிற்றோ, அதைவிட உன்னால் எனக்கு அளிக்கப்பட்ட எனக்குள்ளிருந்த பலம் இன்னும் அதிகமாயிற்று. இப்பலத்தினால் நான் வெற்றி பெற்று, உமது வடிவில் நான் ஆக்கப்பட்டுள்ளேன் என்பதை அறிந்து கொண்டேன். நீயே இந்த அண்ட சராசரத்தின் அரசன். நான் உனது குழந்தை. அண்ட சராசரத்தின் அரச குமாரன். நான் பயப்படுவதற்கு என்ன உள்ளது?"

"ஒரு மானிடனாக பிறந்துவிட்டோம் என்பதை உணர்ந்த உடனேயே நீங்கள் பயப்டும்படியாக எல்லாமே உள்ளன. தப்பிக்க முடியாது எனத் தோன்றுகிறது. நீங்கள் எத்தகைய முன்னெச்சரிக்கையை எடுத்தாலும் சரி, எப்பொழுதும் எங்காவது ஒரு தவறு நேர்ந்துவிடுகிறது. உங்களுடைய ஒரே பாதுகாப்பு இறைவனிடத்தில்நான் உள்ளது. நீங்கள் ஆப்பிரிக்க வனத்திலோ அல்லது போரிலோ இருந்தாலும் சரி, இறைவனிடம் இதை மட்டும் கூறி நம்பிக்கையுடன் இருங்கள் "உனது இருப்பெனும் கவசத்தாலான வண்டியில் இருந்துகொண்டு வாழ்க்கையெனும் போர்க்களத்தினூடாக சென்றுகொண்டிருக்கிறேன். நான் பாதுகாக்கப்பட்டுள்ளேன்."

அவர் தொடர்கிறார்: "பாதுகாப்பாக இருப்பதற்கு வேறு எந்த வழியுமில்லை. பொது அறிவை பயன்படுத்தி இறைவனை முழுமையாக நம்புங்கள். நான்

ஏதோ விசித்திரமான ஒன்றை உங்களுக்குச் சொல்லவில்லை, என்ன நேர்ந்தாலும் சரி, இறைவா, நீ மட்டும்தான் எனக்கு உதவிபுரிய முடியும்." (பகவத் கீதையில் கிருஷ்ணன் அருளுகிறான்: என்னை, தமக்கே சொந்தமென என் மீது தியானம் செய்தும், இடைவிடாத பிரார்த்தனையில் என்றும் என்னுடன் ஒன்றுபட்டும் உள்ள மானிடருக்கு நான் அவர்களுடைய குறைகளை நிவர்த்திப்பதுடன் அவர்கள் பெற்றுள்ள பேறுகளை நிரந்தரமானதாகவும் ஆக்குகின்றேன்.)" (பகவத் கீதை அத்.9 ஸ்லோகம் 22) என்ற இந்த உண்மையை உறுதிப்படுத்திக்கொண்டு, அதை நம்புமாறு உங்களைத் தூண்டுகிறேன். நோய், தவறான பழக்கங்கள் ஆகிய குழிகளில் பலர் வீழ்ந்து, அவற்றிலிருந்து தங்களை வெளியே கொணரவில்லை. நீங்கள் தப்பிக்க முடியாது என ஒருபோதும் கூறாதீர்கள். உங்களுடைய துரதிர்ஷ்டம் ஒரு சிறிது காலத்திற்குத்தான். நீங்கள் வெற்றியாளரா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க ஒரு பிறவியில் ஏற்பட்ட தோல்வி ஓர் அளவாகாது. வெற்றிபெறும் மனிதனின் மனப்பாங்கு பயமற்றது. "நான் இறைவனின் ஒரு குழந்தை; நான் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை." ஆகவே எதற்கும் பயப்படாதீர்கள். வாழ்வும் சாவும் உங்கள் உணர்வு நிலையின் வெவ்வேறு நடை முறைகளே."


குருப்ரியா

"இறைவன் நம்மை சோதிக்கவும், நம்முள் புதைந்து கிடக்கும் ஆன்ம அழிவின்மையை வெளிக்கொணரவும் மட்டுமே எல்லாவற்றையும் சிருஷ்டித்துள்ளான். அதுதான் வாழ்க்கையின் சாகசம்; வாழ்க்கையின் ஒரே நோக்கம். ஒவ்வொருவருடைய சாகசமும் வெவ்வேறானது, தனித்தன்மையுடையது. ஆரோக்கிய, மன, மற்றும் ஆன்ம பிரச்சனைகளை பொது அறிவு வழிமுறைகள் மூலமும், இறை நம்பிகையுட னும், வாழ்விலோ அல்லது மரணத்திலோ உங்கள் ஆன்மா அடிபணியாது என்பது அறிந்தவண் ணம் எதிர்கொள்ள நீங்கள் தயாராக இருக்க வேண்டும். நீங்கள் என்றும் இறக்கவே முடியாது. "ஆன்மாவை எந்த ஆயுதமும் துளைக்க முடியாது; எந்த நெருப்பும் அதை எரிக்க முடியாது; எந்த நீரும் அதை நனைக்க முடியாது; மேலும் எந்தக் காற்றும் அதை உலர்த்த முடி யாது. ஆத்மா மாற்றமில்லாதது, எங்கும் நிறைந்தது; என்றும் சாந்தமானது, அசைக்க முடியா தது. நீங்கள் என்றென்றும் பரம்பொருளின் பிரதிபிம்பம் ஆவீர்கள்."

"மரணம் நம்மை அழிக்க முடியாது என்று அறிந்துகொள்வது மனதை சுதந்திரமாக்கவில்லையா? நோய் வாய்ப்பட்டு தேகம் செயலிழந்ததும் "நான் இறந்து விட்டேன்!" என ஆன்மா எண்ணுகின்றது. ஆனால் இறைவன் அதை உலுக்கி, " உனக்கு என்னவாயிற்று?" நீஇறக்கவில்லை. நீ இன்னும் சிந்தித் துக்கொண்டிருக்கவில்லையா?" என வினவுகின்றான். ஒரு போர்வீரன் நடந்து சென்று கொண்டிருக்கும் போது, ஒரு வெடிகுண்டி அவனுடைய உடலை சின்னாபின்னப்படுத்துகின்றது. அவனுடைய ஆன்மா, "இறைவா! நான் கொல்லப்பட்டுவிட்டேன்," எனக் கூறுகின்றது. அதற்கு இறைவன், "நிச்சயமாக இல்லை! நீ என்னுடன் பேசிக்கொண்டிருக்கவில்லையா? என் குழந்தாய், உன்னை ஒன்றுமே அழிக்க முடியாது. நீ கனவு கண்டு கொண்டிருக்கிறாய்," எனக் கூறுகிறான். அப்பொழுது ஆன்மா புரிந்து கொள்கிறது. "இது அவ்வளவு பயங்கரமானதாக இல்லை. நான் ஒரு பூதஉடல் என்ற எனது தற்காலிக பூலோக வாழ்க்கையின் உணர்வுநிலைதான், நான் அந்த உடலை இழந்தபோது அதுவே என் முடிவு என்று எண்ணச்செய்தது. நான் என்றும் நிலைத்துள்ள ஆன்மா என்பதை மறந்து விட்டிருந்தேன்."

இவ்வாறாக இறுதியில் ஆன்மாவை இறைவன் அதன் நிலையை புரிய வைக்கிறான்.

**ஒவ்வொரு வகையான போராட்டத்திற்கும் தயாராகுங்கள்.**

அன்பு குருதேவர் அருளுகிறார்: "வாழ்க்கையெனும் காட்டின் வழியே பாதுகாப்பாகச் செல்வதற்கு தகுந்த ஆயுதங்களுடன் உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற ஒரு போர்வீரனாக நீங்கள் இருக்க வேண்டும். தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தெரியாத அப்பாவி மனிதன் விரைவில் கொல்லப்படுகிறான். எல்லாவிதமான போர் நடவடிக்கைகளுக்கும் எதிராக நோய்க்கு எதிராக, விதிக்கும், வினைப்பயனுக்கும் எதிராக, அனைத்து தீய எண்ணங் களுக்கும் பழக்கங்களுக்கும் எதிராக போராடுவதற்கு வேண்டிய ஆயுதங்களைக் கொண்டுள்ள அறிவாளி இந்த சாசகத்தில் வெற்றி பெறுகிறான். அதற்கு எச்சரிக்கை அவசியம் . அத்துடன்கூட நமது எதிரிகளை வெல்லத்தக்க சில வழிமுறைகளை



www.aanmeegamalar.com

கையாள்வதும் அவசியம்.”

“நான் முன்னேறும்பொழுது நம்முடைய உடல், மன, நீதி மற்றும் ஆன்ம கேடுகளுக்கு காரணமானவற்றை முற்றிலும் முறியடிக்க மேன்மேலும் சிறப்பான வழிமுறைகளை கற்றுக்கொள்கிறோம். உடல் வியாதிகள், விபத்துக்கள் மற்றும் அகப்போராட்டங்கள் ஆகியவற்றை வெற்றிகரமாகக் கடந்தபிறகு நீங்கள் வாழ்க்கை ஓர் இனிமையான சாகசம் எனக் கூற முடியும். மகான்கள் இதைக் கூற முடியும். ஆனால் அவர்களைப்போல் வெற்றியாளராக நீங்கள் ஆகும் முன்னர் வாழ்க்கை இனிமையானது என்று கூறுவது பக்குவமற்றதாகும். இறுதியான வீடுபேற்றை நீங்கள் அடையும்வரை, ஆன்மா விடுதலை பெற்று இறைவனடி சேரும்வரை, உங்களுக்கு வாழ்க்கை இன்னும் முடிவடையவில்லை. உணர்வுபூர்வமாக பரம்பொருளுடன் ஒன்றிணையும்வரை வாழ்க்கை சாகசத்தில் ஈடுபடும் ஆசையை நீங்கள் வெல்லவில்லை.”

“ஒருவன் துன்புறுவதைக் கண்டதும், அந்தக் குறிப்பிட்ட சாகசத்தை நீங்கள் அனுபவிக்கவில்லை என்பதற்காக நன்றியுடையவராக உணர்கிறீர்கள். ஆனால் நீங்கள் அடுத்தவராக இருக்கக்கூடும். சரீரத்திற்கு நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் எண்ணற்றவை. ஆகவே ஆயத்தமாக இருங்கள். விஞ்ஞானி கூறுகின்றார், “கிருமிகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு சத்தான உணவை அருந்தி, ஆரோக்கிய விதிமுறைகளைப் பின்பற்றுங்கள்.” அரசியல்பாதி கூறுகிறார், “வெளிப்புற எதிரிகளிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கு நல்ல வீரர்களாக இருங்கள்.” விசித்திரமான காலங்களில் நாம் வாழந்து கொண்டிருக்கிறோம். உலகின் இரட்சகர்கள் என்ற மூதுரைப்கேற்ப விளங்கும் பெண்கள் கூட ஏனையோரின் குழந்தைகளைக் கொல்வதற்குப் போராளிகளாகப் பயிற்றுவிக்கப்படுகின்றனர். பயங்கரம்! ஆனால் எப்பொழுதாவது ஒருமுறை போரினால் சிறிதளவு நன்மையும், ஏற்படுகின்றது. அது நம்மிடமுள்ள கோழைத்தனத்தை அகற்றுகிறது.”

பரிகாரம் 6

வலிமை வாய்ந்த இச்சா சக்தியை விருத்தி செய்தல்

குருதேவர் அருளுகிறார்: “இறைவன் குறிப்பிட்ட தேக , மன மற்றும் ஆன்மீக சக்திகளின் உரிமையை மனிதனுக்கு அளித்து பூவுலகிற்கு அனுப்பினான் இவற்றை அவன் உபயோகித்து, புத்திசாலித்தனமான பயன்பாட்டின் மூலம் அவன் கருதிய திட்டவட்டமான பலன்களை விளைவிக்க முடியும். இயந்திரங்களை இயக்கும் சக்தி மின்சாரமாகும். அத்துடன் இறைவன் நமக்கு அளித்துள்ள இந்த சிக்கலான மனித இயந்திரம், மென்மையான சதையினால் மூடப்பட்ட அசையும் எலும்புகளின் கட்டமைப்பையும், கோடிக்கணக்கான செல்களையும் கொண்டுள்ளது, இது நரம்புகளெனும் மின்கம்பிகளின் வழியாக மின்சாரம் போன்று பாய்கின்ற அறிவார்ந்த உயிர் சக்தியாகிய பிராணனால் இயக்கப்படுகிறது.”

“குழந்தைப்பருவத்தில் தேகம், அதிகமாக மனதையொத்து செயல்படுகிறது; அது தேகத்தை மிகச் சுலபமாக தன் கட்டளையை நிறைவேற்றுமாறு செய்ய முடியும். ஆனால் காலம் செல்லச் செல்ல குழந்தை பலவகையான பழக்கங்களை வளர்த்துக் கொள்ளும்போது, தேகமும் மனமும் அதே இணக்கத்துடன் முன்புபோல் செயல்படுவதில்லை. நான் அடிக்கடி குறிப்பிட்டது போன்று பூத உடல் இறை உணர்வு நிலையில் ஒரு கனவு மட்டுமே என்றாலும், அதை நீங்கள் பயன்படுத்தவேண்டிய காலம் வரை, அது உங்களுடைய மனதின் கட்டளைக்கு உட்பட்டிருக்கவேண்டும்.”

“தொல்லைகள் தேகத்தை எப்பொழுதும் தாக்கும்; ஏனென்றால் இது வாழ்க்கையின் ஒரு நியதி. இன்னல்கள் ,இருப்பினும் புற நிலைமைகளால் மனம் பாதிக்கப்படாத படியான மன நடுநிலையை நீங்கள் வைத்திருக்க வேண்டும்.” அவர் ஒரு நிகழ்வினைக் கூறுகிறார்:

“ஒரு மகான் பயங்கரமாகத் துன்புற்றார். ஆனாலும் அவர் மனரீதியாக பாதிக்கப்படாதிருந்தார். அவருடைய மரணத்திற்குச் சிறிதகாலத்திற்கு முன்பாக அவர் பார்வை இழந்துகொண்டிருந்தார். அவர் முகத்தில் புருவங்களிலிருந்து காதுகளின் பின்பக்கம் வரையிலும், வெண்மையாகச் சூடாக்கப்பட்ட ஒரு இரும்புக் கோலினால் சூடுபோடும் சிகிச்சை தேவைப்படுமென வைத்தியர் அறிவுறுத்தினார். அக்காலத்தில் மயக்கமருந்துகள் இருக்கவில்லை. அங்கிருந்த அவருடைய சீடர்களால் அக்காட்சியை தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால் அவர் அந்த சிகிச்சையை தொடரும்படி வைத்தியரிடம் கூறினார். அக்னிதேவனை இனிமையான சொற்களால் அவர் வரவேற்றும், தேகத்திற்கும் மனதிற்கும் உள்ள தொடர்பை மிகச் சிறிய அளவில்கூட தாம் உணர்ந்ததாகக் காட்டவே இல்லை. இந்த உண்மையையும் நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று இறைவன் விரும்புகிறான். அதாவது உங்கள் அழியும் தேகத்தினுள்ளே மாசுபடாத ஓர் அழிவற்ற ஆன்மா உள்ளது.”

“மகான்கள் துன்புறவதே இல்லை எனக்கூறுவது ஒரு தவறாகும். மகான்கள் மனதிற்கும் உடலுக்கும் இடையிலான உறவைப்பற்றி அறிந்திருந்தனர். அவற்றை இறைவனின் பிரபஞ்ச சொப்பனத்தின் ஏமாற்றும் படைப்பாக அவர்கள் கண்டனர். உடல் ஒரு புலன் உணர்வுகளின் தொகுப்பு மட்டுமே. புலன்களின் உணர்வுகளை வெட்டி எறிவது சுலபமானதல்ல, எனினும் நீங்கள் மெய் பொருளுடன் ஒன்றாகியுள்ள ஓர் ஆன்மா என்ற உணர்வு நிலையில் எப்பொழுதும் தொடர்ந்து இருப்பதன்

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

மூலம் நீங்கள் அவ்வாறு செய்ய முடியும். மனமானது உடல் மற்றும் அதன் தேவைகளால் கிட்டத்தட்ட முழுவதுமாக அதிகாரம் செலுத்தப்படும்பொழுது, பெரும்பாலான மனிதர்களிடையே இவ்வாறே நிகழ்வதால் சிறிய விஷயங்களில் மனதை தேகத்திலிருந்து படிப்படியாகப் பிரிக்க ஆரம்பிப்பது மிகவும் நல்லது.''

அவர் தொடர்கிறார்: "ஒரு சாதாரண மனிதனுக்கும் ஒரு மகா மனிதனுக்கும் இடையே உள்ள ஒரு வித்தியாசம் என்னவெனில், சாதராண மனிதன், தான் காயப்படும்பொழுது அழுது, துன்புறுவதற்கு இடம் கொடுக்கிறான். ஆனால் யோகியானவன், தான் தேகமல்ல. அதனின்று தனித்திருக்கிறோம் என்ற உணர்வு நிலையில் வேரூன்றியுள்ளான். இந்த ஞானம் என்னிடம் எல்லா நேரத்திலும் உள்ளது. சில சமயங்களில் நான் நடந்து சென்றுகொண்டிருப்பதைக் காண்கிறேன். அதே நேரத்தில் எனக்கு தேகமில்லை என்றும் அறிகிறேன். தெய்வீக உணர்வு நிலையில் , நீங்கள் ஆன்மா என்ற வகையில் உங்களுக்கு கைகளோ, கண்களோ, செவிகளோ அல்லது கால்களோ இல்லை. மேலும் இந்த ஸ்தூல சேர்க்கைகளுக்கு எந்தத் தேவையும் இல்லை. இருந்தும் நீங்கள் இந்த தேக உபகரணங்களைப் பயன்படுத்தவும் அசைக்கவும் முடியும் என்று அறிகிறீர்கள். மனோ சக்தியை மட்டும் கொண்டே கேட்கவும் காணவும் நுகரவும் தொடவும் முடியும். உதாரணமாக ஞானத்தினால் செவி மடுக்கும் நிலையில், ஒருவர் அகசக்தி மூலம் கேட்கிறார். அனேக மகான்கள் இறைவனின் குரலையோ அல்லது அவனது தேவதூதர்களில் ஒருவர் அவர்களை வழி நடத்தும் குரலையோ கேட்கின்றனர். அவர்கள் செவிகள் மூலம் அல்லாது மனதினாலேயே கேட்கின்றனர்.''

மேலும் அவர் தொடர்கிறார் : "இப்படியான ஓர் உணர்வுநிலை உண்மையான ஓர் அனுபவ மாகும், கற்பனையல்ல. ஆனால் நீங்கள் தியானித்தாலன்றி அது உங்கள் அனுபவம் ஆக முடியாது. பெரும் பக்தியுடன் நீங்கன் தியானம் செய்வீர்களானால் என்றோ ஒரு நாள் நீங்கள் கொஞ்சமும் எதிர்பார்க்காதபோது, அதே அனுபவம் உங்களுக்கு ஏற்படும். அத்துடன் நான் எதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.''

"தேகம் பொய்யானது என்ற இந்த உண்மையை இறைவன் எனக்கு தொடர்ந்து காட்டியவண்ணம் உள்ளான். இத் தேகம் துன்பப்பட்டாகவேண்டும் என்றும்கூட எனக்குக் காட்டியுள்ளான். ஆனால் இப்பூதஉடல் அனுபவிக்க இருக்கும் உடல் ரீதியான துன்பத்திற்கும் எனது உணர்வு நிலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது மற்றவர்களின் எதிர்மறை கர்மவினைப்பயனை ஏற்பதிலிருந்து வருகிறது. மேலும் துக்கத்தை உண்டாக்கும் அகந்தையின் ஆசைகளுடன் அதற்கு எந்தத் தொடர்பும் இல்லை. உலகிற்கும் மற்றவர்களுக்கும் இந்த உடல் கொஞ்சம் நன்மையைச் செய்யுமானால் அது நல்லது. தனது தேகத்திற்கு என்ன நடக்கின்றது என்பதைப்பற்றி ஒரு குருவானவர் கவலைப்படுவதில்லை. மற்றவர்கள் நன்மை அடைவதற்காகவே அவர் அதைப்பேணுகின்றனர்.''

சாதாரண மனிதன் உறக்கத்தில் இருக்கும் ஒரே சமயம்தான் தேக உணர்வில்லாதவனாக இருக்கிறான் இருப்பினும் விழித்தெழுந்ததும், அவன் எவ்வளவு நன்றாக அல்லது குறை வாக உறங்குகிறான் என்பதைப்பற்றி உடனே அறிகிறான். சில உலகவாசிகள் நாம் உறக்கத்தி லிருக்கும்போது முழுவதுமாக நாம் நினைவிழந்து இருக்கிறோம் என்று எண்ணுகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல விழித்த உடன் நான் எவ் வளவு நன்றாக அல்லது மோசமாக உறங்கி னோம் என்பதை உறக்கத்தின்போது நாம் சுயநினைவுடன் இருந்தாலன்றி எப்படி அறிய முடியும்? தேகம் இல்லாமல் மனம் இருக்க முடியும் என்பதை நாம் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# முகலாய கொள்ளையர்களிடமிருந்து திருப்பதி பெருமாளை காப்பாற்றிய வராகமூர்த்தி

வைணவ சம்பிரதாயத்தை முழுவதுமாக கடைபிடிக்கும் ஒரே திருத்தலம் திருவரங்க மாகும், இதற்கு அடுத்தபடியாக விளங்குவது திருப்பதி ஆலயம். பதினோராம் நூற்றாண்டில் இந்தக் கோவிலின் ஆச்சார அனுஷ்டானங்கள் இராமானுஜ ஆச்சார்யரால் முறையாக் கப்பட்டன.

மதுரை மீனாட்சியம்மன் கோவில், அரங்கநாதசுவாமி கோவில்ஆகிய வை இசுலாமியர்களால்சூறையாடப் பட்டபோது தென்னிந்தியா வில் தப்பி இருந்த இடம் திருப்பதி மட்டும்தான்.

இந்த இசுலாமிய பிர வேசங்களின் பொழுது திருவரங்கத்தில் இருந்த திருவரங்கர் திரு உருவச் சிலை திருப்பதிக்கு கொண்டுவரப் பட்டு பராமரிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிகழ்வை குறிப்பதற்காக கட்டப் பட்ட ரங்கநாத மண்டபம் இன்றும் திருப்பதியில் இருக் கிறது.

இசுலாமியர்களிடமிருந்து திருமலை கோயில் தப்பியதற்கு சுவாரசியமான வரலாறு ஒன்று சொல்லப்படுகிறது. முகலாயப்படையினர் மலையின்மேல் என்ன கோயில் இருக்கிறது என்று கேட்டபோது அவர்களின் நோக்கத்தையும் பழக்க வழக்கங்களையும் நன்கறிந்த உள்ளூர் மக்கள் பன்றிக் கடவுளின் கோயில் என்றனராம்.

பன்றிகளின் மீது முகலாயர்களுக்கு இருக்கும் வெறுப்பால் அவர்கள் திரு மலைக்கு செல்லும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டனர் என்று சொல் லப்படுகிறது.

மக்கள் குறிப்பிட்டது வராஹப் பெருமாளின் திருக்கோயிலை. இந்தப் பெருமாளை தரிசித்த பின்னர்தான் ஏழுமலையானை தரிசிக்கவேண்டும் என்கிற சம்பிரதாயம் கடைபிடிக்கப் படுகிறது.



- விநாயகருக்கு எளிதாக கிடைக்கக் கூடிய அருகம்புல் மிக விருப்பம். அருகு வைத்து விநாயகரை வழிபட்டால் பிறவிப் பிணி நீங்கி, இன்பம் பெருகும்.
- விநாயகருக்கு கரும்பு, அவரை, பழங்கள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு, அப்பம், பச்சரிசி, பிட்டு, வெள்ளரிப்பழம், கிழங்கு, அன்னம், கடலை முதலியன வைத்து நிவேதனம் செய்ய வேண்டும்.
- விநாயக சதுர்த்தி அன்று நாம் பூஜை செய்யும் விநாயகர் சிலை மண்ணினால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். நம் கட்டை விரல் அளவைப் போல பன்னிரண்டு மடங்கு அளவில் இருக்க வேண்டும்.

# யந்திரம்

யந்திரம் என்பது ஒரு தகடு, பிரச்சனையை தீர்க்கும் ஒரு பரிகார முறையாகும்.

ஒரு தகடு எப்படி ஒரு மனிதனின் பிரச்ச னையை தீர்க்க முடியும் என்ற கேள்வி தோன்றும். அதை எப்படி செய்கிறார்கள் என்பதில் அதன் விடை இருக்கிறது.

யந்திரம் என்பது பொதுவாக ஒரு மெல்லிய தகடு ஒன்றில் சக்கரம் வரைந்து மந்திர உரு வேற்றபடுவதாகும்.

இதில் தங்கம், வெள்ளி, செம்பு, காரீயம், வெள்ளீயம் (ஈயம்) போன்ற தகடுகளை பயன் படுத்தப்படும். இது பொதுவாக சதுரங்க வடிவம் கொண்டே தகடுகளை தான் பயன் படுத்தப்படும். இது எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதை பொருத்து இதன் அளவு மாறுபடும். அளவு அதிகமாக அதிகமாக சக்திகள் அதிக மாகும்.

இந்த யந்திரம் எந்த காரணத்திற்காக செய்யப் படுகிறதே, அந்த காரணத்திற்கான கிரகம், அந்த கிரகத்தின் தேவதை, அந்த கிரகத்தின் அதிதேவதை போன்றவர்களுக்கன குறியீடு, மந்திரம், மூலமந்திரம் அகியவற்றை அந்த தகட்டில் வரைந்து(கிறி) வைக்க வேண்டும்.

இதில் எழுத பயன்படுத்தும் பொருள் (எழுத்தாணி) மிகமுக்கியமானது. தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, ஈயம், பஞ்சலோகம், அஷ்டலோகம் போன்ற ஆணிகளால் தான் எழுத வேண்டும், இரும்பு ஆணியால் எழுத கூடாது.

இப்படி எந்த தேவைக்காக செய்கிறாரே அதற்கான சக்கரத்தை வரைந்து (தகட்டில் ஒட் டை கிழிசல் வரக்கூடாது) பின் அஷ்டகந்தம் பூசபடும் (அஷ்டகந்தம் என்பது 1.புனுகு, 2.கஸ்தூரி, 3.கோரோசனை, 4.குங்குமப்பூ, 5.அத்தர்/சந்தனம், 6.பச்சைகற்பூரம், 7.ஜவ்வாது, 8.அரகஜா. ஆகியவை சேர்ந்த கலவையாகும்.)

பின் சக்கரத்திற்கு வலுவூட்ட மந்திர உரு வேற்றபடும். இதில்தான் ஒரு யந்திரத்தின் முழு சக்தி அடங்கி இருக்கிறது. மந்திர சக்தி ஏற்பட அந்த தகடுகளில் ஐங்காயம் பூச வேண்டும் (வசம்பு, ஓமம், உள்ளி (ஒரு தலை பூண்டு), கடுகு, பெருங்காயம்).



பின் நீர், வெற்றிலை பாக்கு, நைவேத்தியம் படைத்து தூபம் தீபம் சுற்றி பின் மந்திரங்களை ஜெபிக்க வேண்டும். இதில் எத்தனை உரு ஜெபிக்கின்றோமே அதை பொருத்து அந்த யந்திரத்தின் ஆற்றல் இருக்கும். 9ல் வருகிற எண்ணிக்கையில் 108 முதல் 1000000000008 வரை எண்ணிலடங்கா வரையும் சொல்லலாம்.

கோயில்களில் மூலவர் சிலைக்கு கீழ் யந்திரம் இருக்கும் குறிப்பிட்ட கோயில் கட்ட எவ்வளவு



ஆண்டுகள் ஆயினாலே அவ்வளவு ஆண்டுகள் அந்த யந்திரத்தை சித்தர்கள்/ ரிஷிகள் மந்திர உரு ஏற்றியிருப்பார்கள்.

இந்த யந்திரத்தை பூஜை அறையில் வைத்து வணங்கினால் மிக சிறந்த பலன் கிடைக்கும். இதையே மிக மெல்லிய தகட்டில் செய்து உருட்டி தங்கம்/ வெள்ளி குழாயில் அடைத்து உடம்பில் படும் படி கட்டி கொண்டால் அதுதான் தாயத்து.



ஆர். சதீஷ்,

ஆனால் இதை முறையே செய்யாமல் (உரிய தகடு, ஆணி) பலன்கள் தராது, அதேபோல் முறையே உரு ஏற்றவில்லை என்றாலும் பலன் தராது அல்லது சில நாட்கள் மட்டுமே பலன் தரும் (தொலைக்காட்சியில் விளம்பரம் செய்து விற்பனை செய்யும் பல இப்படி தான் இரும்பு ஆணி (machine) யில் பல லட்சம் செய்து எதாவது ஒரு ஹோமத்தில் வைத்து ஒரு நாள் மட்டும் பூஜை செய்து விற்கும் யந்திரத்தில் ஒரு பயனும் இல்லை.

எந்த காரியத்துக்காக செய்கிறாரே, அதை முறையாக செய்த ஒரு யந்திரத்தை பயன்படுத்தி நிச்சயம் நல்ல சுப பலன்கள் அடையலாம்.

அனைத்து வகை தாயத்து யந்திரங்கள் நன்மைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமே யொழிய எக்காரணம் கொண்டும் தீமைக்கு இடம் கொடுக்க கூடாது.

– ஆர். சதீஷ், கடலூர்
aboorvam divine centre
போன்: 9655714283

# பார்வை கோளாறுக்கு கண் கண்ட தெய்வம்

இழந்த பார்வையை திரும்ப பெறுவதற்காக சுக்ராச்சாரியர், வழிபட்ட தலம் வெள்ளீஸ்வரர் திருக்கோவில். இத்தல இறைவனை வழிபட்டால், கண் நோய் நீங்கும் என்பது ஐதீகம்.

மயிலாப்பூரில் பிரசித்திப்பெற்ற கபாலீஸ்வரர் கோவிலின் அருகிலேயே, வெள்ளீஸ்வரர் திருக்கோவில் அமைந்துள்ளது. சிவனுக்கும், காமாட்சி அம்மனுக்கும் உரியதான ஆலயமாக இது கருதப்படுகிறது. சப்த ரிஷிகளில் ஒருவரான ஆங்கீரச முனிவர் வழிபட்ட தலம் இது. மகாவிஷ்ணு, வாமனராக அவதரித்தபோது, மகாபலி நடத்திய யாகத்தில் யாசகம் கேட்டுச் சென்றார்.



அவர் ‘தன் பாதங்கள் அளப்பது வரையான மூன்று அடி மண் வேண்டும்’ என்று கேட்டார். அதைத் தருவதாக மகாபலியும் ஒப்புக்கொண்டார். ஆனால் மகாபலியின் அசுர குருவான சுக்ராச்சாரியார், வந்திருப்பது மகாவிஷ்ணு என்பதை உணர்ந்து மகாபலியை தடுத்தார். ஆனாலும் கமண்டல நீர் கொண்டு நிலத்தை தாரை வார்க்க முன்வந்தார், மகாபலி.

உடனே சுக்ராச்சாரியார், வண்டாக உருவெடுத்து, கமண்டல நீர் வரும் பாதையை தடுத்தார். இதை அறிந்த வாமனர், தர்ப்பை புல்லை எடுத்து நீர் வரும் பாதையில் குத்தினார். அதில் தர்ப்பைப் புல் குத்தி, வண்டின் கண் பார்வை பறிபோனது. இழந்த பார்வையை திரும்ப பெறுவதற்காக சுக்ராச்சாரியர், வழிபட்ட தலம் இதுவாகும். சுக்ரனுக்கு ‘வெள்ளி’ என்ற பெயரும் உண்டு.

# துன்பம் துயரத்தை போக்கும்

# அடிமுடிசித்தர்

கிரேன் கருவி இந்தியாவுக்குள் வராத காலம். திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் பல நூறு டன் எடை உள்ள ஒரு சிறிய மலையை போன்ற ராக்ஷத பாறை இருந்தது.

அந்த பாறை மக்கள் கிரிவலம் செய்வதற்கு மிக இடையூறாக இருந்தது.

10, 15 காட்டு யானைகளை வைத்து அந்த பாறையை அப்புறப்படுத்த முயற்சித்தார்கள், ஆனால் பலன் இல்லை.

அப்பொழுது அங்கு ஒருவர் வந்தார். 27 அடி நீளமுடைய தலைமுடியை கொண்டவர் அவர்.

அந்த பாறையை தனது ஜடாமுடியில் கட்டி தனி ஒருவராக இழுத்து ஒரு பாதுகாப்பான இடத்தில் தூக்கி வீசி எரிந்தார். அவர்தான் அடிமுடி சித்தர்.

ஸ்ரீ சக்கர அம்மாவின் குரு தான் அடிமுடி சித்தர்.

மறக்காதிரு, பிறக்காதிரு, இறக்காதிரு என்னும்உபதேசத்தை ஸ்ரீ சக்கர அம்மாவிற்கு செய்தவர் அடிமுடி சித்தர்.

இறைவனை மறக்காத்திருந்தால் நீ இன்னொரு பிறவி பிறக்காது இருப்பாய்.

இன்னொரு பிறவி நீ பிறக்காது இருந்தால் இறக்காது இருப்பாய் என்பதே இதன் அர்த்தம்.

அடிமுடி சித்தர் பல அற்புத சித்துக்களை சர்வ சாதாரணமாக செய்தவர்.

ரமண மகரிஷி, சேஷாத்ரி சுவாமிகள் ஆகியோருக்கெல்லாம் மூத்தவர்.

ரமண மகரிஷி, சேஷாத்ரி சுவாமிகள், யோகிராம் சுரத் குமார் முதலான மகான்களால் வழிபடப்பட்டவர்.


மிக குறிப்பாக அடிமுடி சித்தர் ஜீவசமாதி அடைந்தவர்.

அடிமுடி சித்தருக்கு மிகவும் பிடித்த உணவு கேழ்வரகு.

கேழ்வரகு கஞ்சி, கேப்பங்கூழை மட்டுமே இவர் உணவாக உட்கொண்டு வாழ்ந்தார்.

ஸ்ரீ சக்கர அம்மா அடிமுடி சித்தரை தரிசித்து உபதேசம் பெறும் பொழுது. கேப்பங்கூழை தான் அவருக்கு குரு தக்ஷணையாக தந்தார்.

அடுத்த முறை நீங்கள் அடிமுடி சித்தரை தரிசிக்க செல்லும் பொழுது கேழ்வரகு மாவை, முடிந்தால் கஞ்சி, கூழை இவருக்காக கொண்டு செல்லுங்கள்.








அடிமுடி சித்தருக்கு கேழ்வரகு, பூ, நல்லெண்ணெய் ஆகிய மூன்றை காணிக்கையாக கொடுத்து. முடிந்தால் ஒரு வேட்டி. கொடுத்து நாம் வேண்டி கொண்டால். நமது அனைத்து துன்பங்களும், துயரங்களும் தூள், தூளாகும் என்பது நிதர்சனம்.

இவரின் ஜீவசமாதி கிரிவலப்பாதையில் உள்ள சூரிய லிங்கத்திற்கு மிக அருகே இருக்கிறது.

# மனிதனின் திறமை ஆண்டவனுக்குத் தேவை இல்லை பக்தியே ஆண்டவனுககுத தேவை

நீராவி என்ஜீன், டீசல் என்ஜீன், மின்சார ரயில் என்று முன்னேறி உள்ளதைப் போல், பக்தியில் பல வகையான பக்திகள் என்றே இல்லை.

❖❖❖

இறைவனை பற்றிக்கொள்ளும் ஒரே முன்னேற்றமே பக்தி.

❖❖❖

சிந்திக்கும் அறிவைச் சிந்திப்பதற்கு மட்டுமே உபயோகப்படுத்து. அதை மற்ற எதற்கும் உபயோகப்படுத்தாதே.



❖❖❖

உணவு தானியம் ஆடு, மாடுகளுக்கல்ல. பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை நமக்கல்ல என்பதை உணர்ந்துவிடு.

❖❖❖

மனிதனது திறமை மனிதனுக்கே தேவைப்படுகிறது. அதனால் அவன் எவருக்கும் அதை அளிப்பதில்லை.

❖❖❖

தென்னம் பன்னாடையை விலை கொடுத்து வாங்குவோர் இல்லை. அதுபோல் மனிதனின் திறமை ஆண்டவனுக்குத் தேவை இல்லை. உங்களது பக்தியே ஆண்டவனுக்குத் தேவை.

❖❖❖

தேகப்பயிற்சி செய்தால் உடனே உடலில் பொலிவும் பிரகாசமும் தெரியும். சிந்தனை செய்து பார். உலகில் உனது முன்னேற்றம் உடனே தெரியும்.

❖❖❖

போட்டோ எடுத்து அதைத் கழுவினால் உடனே அதில் உன் படம் தெரிவது போல் அறியாமையைக் கழுவினால் அகத்திற்குள் ஆண்டவன் தெரிவான்.

❖❖❖

மணற்கேணிக்கே தூர் வாரும் நிலை வரும். கடலுக்கு தூர் வாருவதே கிடையாது. சிந்திக்கும் நிலையைப் பெற்றுவிட்டால் உன்னிடம் அழுக்கு இருக்கவே முடியாது.

❖❖❖

சிந்தனை என்பது தான் மிகப் பெரிய தீனி. இதை எவரும் உண்பதில்லை.

இதனால் நான் மட்டும் தின்று கொழுக்கிறேன்.

❖❖❖

பேனா அழகா? எழுத்து அழகா? என்றால் எழுத்தே அழகு. கடவுளால் பக்தனுக்கே லாபம். பக்தனால் கடவுளுக்கு லாபமே இல்லை.

❖❖❖

பட்டாம் பூச்சி அழகானது. இது பூச்சி வர்க்கத்திற்கும் நமக்கும் தொல்லையே தராது. இது போன்று புத்தியுள்ள மனிதன் சமுதாயத்தின் நண்பன். மேலும் அழகுள்ளவன்.

❖❖❖

நீ நற்சிந்தனைக்கு மாறாமலிருக்க ஒரு குணம், சிறுவய திலிருந்து உன்னிடம் இன்று வரை மாறாமலேயே இருக்கும். நீ உயர்ந்த மனித நிலையிலிருந்து பிறழாமல், கெடாமல் இருக்க, ஒரு சிறந்த குணம் உன்னை விட்டுப் பிரியாமலே இருக்கும். இவை எவையெவை என்பதை நீயே அறி.

❖❖❖

ரயில் வண்டி பிளாட்பாரத்தில் வந்து நின்றவுடன் ஒரு தொழிலாளி ஒவ்வொரு பெட்டியின் அடியையும் சுத்தியால் “டங்டங்” என்று தட்டுவான். இதுபோல் ஒவ்வொரு முறையும் ஆண்டவன் என் வழியாக உங்களை அடிக்கடி சந்திக்கிறான். காரணம் பக்தி கழன்று விடாமலிருக்க.

❖❖❖

‘வெளிச்சத்திற்கு வா’ என்று சொன்னால் அறியாமையை விடு, புத்தியுடன் இரு என்று பொருள்.

❖❖❖

எல்லா உயிர்களிடத்திலும் கடவுளைப் பார்.

❖❖❖

அந்தரங்க சுத்தியுடன் நாய் ஒன்றே மனிதனை எஜமானனாக எண்ணுகிறது. இதனால் நாயை நான் ‘பிரும்மம்‘ என்றேன். தொழுதேன்.

❖❖❖

நாயைக் கண்டு மனிதன் அஞ்சி, அதைக் கேவலமாய் எண்ணுகிறான். விருந்தினரை உபசரித்து அவர்களையே சிறப்பாக எண்ணுகிறான். அந்தோ பரிதாபம்! விருந்தினன் விருந்தைக் குறை கூறுகிறான். ஆனால் நாய் நன்றியுடன் வாழுகிறது.

ஞானச்சேரி ஞானிகள்

**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்

**N.P.சந்திரன் நடராஜன்**

செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:

அழகுராஜா

செல்: 9994162192

♦♦♦

துணை ஆசிரியர்கள்

ஷியாம்சுந்தர்,

சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா

குருபிரியா செல்: 9894595909

புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு

பான்ராஜாகிராபிக்ஸ்

செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்

**aanmeegamalar.com**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்

**9444228203**

www.aanmeegamalar.com

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலில் பிரம்மோற்ஸவம் நடந்து வருகிறது. விழாவின் கடைசிநாளன்று, அம்பாள் விஸ்வரூப காட்சி தருவாள்.

இதையொட்டி, அக்கோயிலில் நடந்த அதிசய சம்பவம் ஒன்றைக் கேளுங்கள்.காஞ்சி மகாப் பெரியவர் பக்தர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்த போது, ஒரு பெண் பெரியவரிடம் வந்து, சுவாமி! என் மகளுக்கு திருமணம். ஆனால், திருமாங்கல்யம் வாங்கக்கூட வசதியில்லை, என்று சொல்லி அழுதார்.

பெரியவர் அந்தப் பெண்ணிடம், நீ போய் காமாட்சியம்மனை தரிசனம் செய்துவிட்டு இங்கே வா, என்றார். அந்தப் பெண்ணும் கோயிலுக்குச் சென்று அம்பாளைத் தரிசித்து விட்டு, பிரகார வலம் வரும்போது, கீழே ஒரு திருமாங்கல்யம் கிடப்பதைக் கண்டார்.

மகிழ்ச்சியுடன் அதை எடுத்துக் கொண்டு மடத்திற்கு வந்து பெரியவரிடம் காட்டி, அது தனக்கு கிடைத்த விதம் பற்றி சொன்னார். பெரியவர், அதை என் முன்னால் வைத்துவிடு, உனக்கு வேறு மாங்கல்யம் தருகிறேன், என்றார்.

அந்த சமயத்தில் ஒரு பக்தர் வந்தார். அவர் இரண்டு திருமாங்கல்யங்களை பெரியவர் முன் வைத்தார். பெரியவா! என் மகளுக்கு திருமணம். திருமாங்கல்யத்தை உங்களிடம் கொடுத்து ஆசி பெற வந்தேன், என்றார்.

அது சரி! உன் மகளுக்கு ஒரு மாங்கல்யம் தானே தேவை. இன்னொன்று எதற்கு? என்றார்.அது இங்கு வரும் ஏழை பக்தர்களில் யாராவது ஒருவருக்கு உங்கள் மூலமாக கொடுக்க! என்றார் பக்தர். அப்படியா! என்ற பெரியவர், கூடுதலாக இருந்த மாங்கல்யத்தை அந்தப் பெண்ணிடம் கொடுத்து, உன் மகள் கல்யாணத்தை சிறப்பாக நடத்து, என்றார்.

அவர்கள் சென்ற சிறிது நேரத்திற்குள் இன்னொரு பெண் ஓடி வந்தார். சுவாமி! நான் காமாட்சியம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தேன்.


என் மாங்கல்யம் எங்கோ தவறி விழுந்து விட்டது. ஐயோ! கோயிலுக்கு வந்த இடத்தில் இப்படி ஆகி விட்டதே! தாங்கள் தான் என்னை சுமங்கலியாக இருக்க வாழ்த்த வேண்டும்! என்று அழுதார்.

அழாதே! இதோ! நீ தொலைத்தது இந்த திருமாங்கல்யம் தானா சொல்! என்று ஏழைப் பெண்மணி தன்னிடம் ஒப்படைத்ததைக் காட்டினார். இதுதான்! என்று ஆனந்தமாக வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டார் அந்தப் பெண்.

மூன்று பேருக்கு ஒரே நேரத்தில் மாங்கல்ய பாக்கியம் அருளியவள் காஞ்சி காமாட்சி. குருவருளும், திருவருளும் ஒரு சேர கிடைக்கும் இடம் காஞ்சி என்றால் அது மிகையல்ல!

# மாங்கல்ய பாக்கியம்





www.anmegamalar.com

# மனம் அதிகம் சஞ்சலம் அடைகிறதா?

ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணப் பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு ஏரியை எதிர் கொண்டபோது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரும் சற்று ஓய் வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள்.

புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர்கொண்டு வரச் சொன்னார்.

சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக்கொண்டு நீர்நிலையை நோக்கி நடந்தார்.

அந்த நேரத்தில், மாட்டு வண்டிக்காரர் ஒருவர், ஏரிக்குள் இறங்கி ஏறியைக் கடந்து சென்றார்.

ஏறி கலங்கி விட்டது. அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து, நீரை அசுத்தப் படுத்தி பார்ப்பதற்கே உபயோக மற்றதாகக் காட்சியளித்தது.

இந்தக் கலங்கிய நீர் எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டு போய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார்.

அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித் தார்.

ஒரு மணி நேரம் சென்ற பிறகு, புத்தர் தன்னு டைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்றுவரப் பணித்தார்.

நீர்நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது. சகதி நீரின் அடி யிற்சென்று பதிந்திருந்தது.

ஒரு பானையில், தண்ணீரை எடுத்துக் கொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான்.

புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த் தார். பிறகு மெல்லிய குரலில் சொல்லலானார்.

தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்...?

நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று!

நீ அதை அதன் போக்கிலேயே விட்டாய்.

அது தானாகவே சுத்தமாயிற்று.

அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா?

ஆமாம் சுவாமி!

நம் மனமும் அப்படிப்பட்டதுதான்...

மனம் குழப்பத்தில் இருக்கும்போது நாம் ஒன்றும் செய்ய வேண்டாம்.

அதை அப்படியே விட்டு விட வேண்டும். சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். அது தனக்குத்தானே சரியாகிவிடும்.

நாம் எந்தவித முயற்சியும் செய்ய வேண்டாம்.

மனதை சமாதானப் படுத்தும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும் வேண்டாம்.

அது அமைதியாகிவிடும்.

அது தன்னிச்சையாக நடக்கும்.

அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும்.


It will happen. It is effortless.

மன அமைதி என்பது இயலாத செயல் அல்ல!

இயலும் செயலே!

அதற்கு நம் பங்கு எதுவும் தேவை இல்லை!





# ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

இப்புண்ணிய சரிதம் ஸ்ரீ வேதவ்யாஸரின் புதல்வரான ஸ்ரீசுகப்ரஹ்ம மஹரிஷியினால் அபிமன்யு உத்தரை பிள்ளையான ஸ்ரீபரீக்ஷித் மஹாராஜாவிற்கு சமீக முனிவரை அவமதித்து பெற்ற சாபத்தினால் தான் இன்னும் ஒருவார காலத்திற்குள் இறப்பதை அறிந்து ஸ்ரீமத் பாகவதம் சப்தாஹ பாராயணம் செய்து ஸ்ரீமன் நாராயணரின் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைந்தார்.

பூர்வத்தில் ஸ்ரீமத் பாகவதம் சனகாதி முனிவர்களால் நாரதருக்கும் நாரதரின் மூலம் சுகருக்கும் சுகரின் மூலம் ஸ்ரீ பரீக்ஷித் மன்னனுக்கும் உபதேசிக்கப்பட்டது.

"ஜந்மாந்த்ரே பவேத் புண்யம்
ததாபாகவதம்லபேத்"

பல ஜென்மங்களில் சேமித்த புண்யங்களினாலேயே ஒருவனுக்கு ஸ்ரீமத் பாகவதம் படிக்கும் பாக்கியம் கிடைக்கும்.

பகவானுக்கு சமமானவரோ, அவரை விட உயர்ந்தவரோ ஒருவரும் இல்லை. அவர் ஈடு இணையற்றவர். ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்.

பகவானின் ஸ்வரூபமே ஸ்ரீமத் பாகவதம் என்றும் அதை கேட்பதினாலும், படிப்பதினாலும் ஸ்ரீமன் நாராயணரின் மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை மிகவும் எளிதாக அடையலாம்.

தவத்தினாலும், யோகசித்திகளாலும், சமாதியினாலும், அடைய முடியாத நற்பலனை ஸ்ரீஹரி நாம ஜெப சங்கீர்த்தனத்தினால் மிகவும் சுலபமாக அடைந்து விடலாம்.

ஸ்லோகார்தம் ஸ்லோகபாதம் வா நித்யம்
பாகவதோத்பவம்!
படஸ்வ ஸ்வமுகேநைவ யதீச்சஸி பராம் கதிம்!!

ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள ஒரு ஸ்லோகத்தையோ அல்லது அதன் பொருளையோ எவன் ஒருவன் தனது வாக்கினால் உச்சரிக்கின்றானோ அவனுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும். உத்தமமான லோகமும் சித்திக்கும். இம்மஹா புண்ணிய சரிதத்தை ஒரு மனிதன் தனது வாழ்நாளின் இறுதியில் கேட்பானாயின் ஸ்ரீமன் நாராயணர் உத்தமமான வைகுண்ட லோகத்தை அவனுக்கு அளிக்கிறார். காலம், நேரம், நியமம் என்பது பாகவத பாராயணத்திற்கு கிடையாது. எந்நேரமும் பாராயணமும் செய்யலாம்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஸ்ரீமத் பாகவதத்தை உத்தவருக்கு உபதேசம் செய்த பிறகு, தனது தேஜோமய சக்தியை பக்த ரக்ஷணத்திற்காக ஸ்ரீமத் பாகவதத்தில் பிரவேசிக்க செய்தார். ஸ்ரீமத் பாகவதம் முழுவதும் ஸ்ரீகிருஷ்ண ப்ரபாவம்தான். குறிப்பாக பத்தாம் அத்தியாமான தசம ஸ்கந்த

பாராயணம் மகா புண்ணியமாகும். இந்த கலியில் காமக்ரோதங்களை ஜெயிப்பதற்கு இதுவே மிக சிறந்த தர்ம சாதனம். ஸ்ரீ சுகர் ஸ்ரீமத் பாகவதம் அனைத்து புராணங்களின் திலகமாக விளங்குகிறது என்கிறார். மனிதர்கள் முக்தியை அடைய உதவும் எளிய உபாயமும் ஸ்ரீமத் பாகவத பாராயணம் ஒன்றுதான்.

க்ருஷ்ணப்ரியம் ஸகலகல்மஷ நாஸனம் ச
முக்த்யேக ஹேதுமிஹ பக்திவிலாஸகாரி !
ஸந்த: கதாநகமிதம் பிபதாதரேண லோகெ
ஹி தீர்த பரிஸீலந ஸேவயா கிம் !!

சகல பாபங்களை அழிகின்றதும், மோக்ஷ சுகத்தைஅளிப்பதுமான இச்சரித்ததை பாராயணம் செய்யுங்கள். ஸ்ரீக்ருஷ்ணருக்கு மிகவும் ப்ரீதியான தீர்த்தமாக ஸ்ரீமத் பாகவதம் இருக்கையில் மக்கள் பல பல தீர்த்தங்களை தேடி, ஒடி அலைவானேன்?

வாஸுதேவபரா வேதா வாஸுதேவபரா மகா : !
வாஸுதேவபரா யோகா வாஸுதேவபரா க்ரியா:!!
வாஸுதேவபரம் ஞானம் வாஸுதேவபரம் தப:!
வாஸுதேவபரோ தர்மோ வாஸுதேவபரா கதி:!!

வேதங்களும், யாகங்களும், யக்ஞங்களும் வாஸு தேவனாகிய ஸ்ரீகருஷ்ணரின் மகிமை களையே பறைசாற்றுகின்றன. ஞானம், தவம், தர்மம் என அனைத்தினாலும் அறியப்படுபவர் ஷாக்ஷாத் வாசுதேவனாகிய ஸ்ரீ கிருஷ்ணரே. ஸ்ரீ ஹரியே சகல தேவதா மூர்த்தங்களில் பிரதான மானவர். அனைத்து தேவதைகளும் அவரின் சரீரத்திலிருந்தே தோன்றியவர்கள். அதில் ஸ்ரீமன் நாராயணர் எடுத்த ஸ்ரீக்ருஷ்ணாவதாரம் பரம பவித்ரமானது.

பரம பாகவதனான ஸ்ரீ பரீக்ஷித் மஹாராஜா ப்ராஹ்மணர்களின் வழிகாட்டுதலின்படி தர்ம நீதி வழுவாமல் அரசாட்சி புரிந்தான். உத்தரனுடைய பெண்ணான இராவதியை மனம் புரிந்து ஜனமேஜயன் உள்ளிட்ட நான்கு குமாரர்கள் பிறந்தனர். தர்மத்தையும், பூமியையும் நன்றாக பாதுகாத்து மிக்க புகழுடன் அஸ்தினாபுரத்தில் ஆண்டு வந்தான்.

கலி வசிக்கும் இடங்கள் : சூதாட்டம், மது, விபச்சாரம், கொலை, ஸ்வர்ணம், காமம், விரோதம் மற்றும் கோபம்.

தஸ்மை நமோ பகவதே வாஸுதேவாய தீமஹி!
யன்மாயயா துர்ஜயயா மாம் ப்ருவந்தி
ஜகத்குரும்!!

இவ்வுலகம் முழுவதுமே பரவாஸுதேவனுடைய சக்தியினாலேயே விளங்குகின்றன. அனைத்து அண்ட சராசரங்களும் அவருடைய திவ்ய விபூதி யாகும். அனைத்து பக்தி யோக மார்க்கங்களும் இறுதியாக ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவையே அடைகின்றது. அனைத்திற்கும் சாக்ஷியாகவும், அனைத்து ஜீவராசிகளிலும் அந்தர்யாமியாக விளங்குபவரும் அவரே.

எல்லாக்காலங்களிலும், எல்லா இடங்களிலும் மக்கள் ஸ்ரீ ஹரியையே பூஜிக்க வேண்டும், ஸ்ரீ ஹரி நாம கீர்த்தனைகள் பாடவேண்டும். ஹரே கிருஷ்ண நாமம் ஜபிக்க வேண்டும். எவன் ஒருவன் இந்த உத்தமமான ஸ்ரீமத் பாகவத கதாம்ருதத்தை தெவிட்டாமல் பருகுகின்றானோ அவனுடைய சித்தம், ஆத்மா, மனது பரம பவித்ரமாகின்றது. முடிவில் ஸ்ரீ ஹரியின் பாதார விந்தங்களை அடைகின்றான். மாயை, கலி பரம பாகவத்தினிடத்தில் விலகியே இருக்கின்றது. வைராக்கிய சித்தம் உள்ளவனை கலிபுருஷன் அண்டுவதில்லை.

ஸ்ரீமத் பாகவதத்தை விட ஏழே நாட்களில் முக்தியை அளிக்ககூடிய கிரந்தம் வேறு ஒன்றும் கிடையாது. கலியுகத்திலோ ஸ்ரீ கிருஷ்ண கதை யாலும், ஸ்ரீ கிருஷ்ண கீர்த்தனத்தினாலுமே ஞானமும், வைராக்கியமும் உண்டாகின்றன. ஸ்ரீபகவான் கோலோகத்திற்கு எழுந்தருளியபோது தனது திவ்ய தேஜஸை ஸ்ரீமத் பாகவதத்தில் வைத்தார் என்று 11 ஆம் ஸ்கந்தத்தில் கூறப் பட்டுள்ளது. ஸ்ரீமத் பாகவதம் சாக்ஷத் ஸ்ரீ கிருஷ் ணரின் திவ்ய திருவுருவாகும்.

இந்த பாகவதத்தில் இல்லாதது உலகின் வேறெந்த நூலிலும் இருக்காது. பாகவதத்தில் எது உள்ளதோ அது மற்ற க்ரந்தங்களிலும் உள்ளது. ("யதி ஹாஸ்தி ததன்யத்ர யக்நே ஹாஸ்தி ந குத்ரசித்")

ஸ்ரீ ஹரியானவர் தசாவதாரங்களை தவிர்த்து ஏனைய பல திவ்ய அவதாரங்களையும் லோக சம்ர க்ஷணத்திற்காவும் தர்ம பரிபாலனத்திற்காவும் எடுத்துள்ளார். ஒவ்வொரு அவதாரங்களிலும் பல தர்ம ரஹஸ்யங்கள் பொதிந்துள்ளன.

ஸ்ரீமத் பாகவதம் தெரிவிக்கும் ஸ்ரீமன் நாராயணரின் திருஅவதாரங்கள்:

மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்ஹம், வாமனர், பரசுராமர், ஸ்ரீராமர், ஸ்ரீ கிருஷ்ணர், பலராமர், கல்கி, சுயக்ஞன்(ஹரி), கபிலர், ஸ்ரீதத்தாத்ரேயர், குமாரவதாரம், நரநாராயணர், பிருகு சக்கரவர்த்தி, ரிஷபாவதாரம், ஹயக்ரீவர், தன்வந்திரி

– மதுரை சு. ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்










# திருமலை திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் நடைபெறும் நிகழ்வுகளின் தொகுப்பு



திருப்பதி ஏழுமலையான் கோயில் அதிகாலை 3 மணிக்கு திறக்கப்பட்டு 3.30 வரை சுப்ரபாத தரிசனம் நடக்கும்.

காலையில் ஸ்வாமியை எழுப்புவதற்கு 2 அர்ச்சகர்கள், 2 ஊழியர்கள், தீப்பந்தம் பிடிக்கும் ஒருவர், வீணை வாசிக்கும் ஒருவர் என 6 பேர் சன்னதி முன்னால் உள்ள தங்க வாசலுக்கு வந்து சேருவார்கள்.

முதலில் துவார பாலகர்களுக்கு நமஸ்காரம் செய்வார்கள்.

பின் அர்ச்சகர் ஒருஊழியரிடம் சாவியைவாங்கிசன்னதியைதிறப்பார்.

பின்னர் ஸ்வாமியை வணங்கி விட்டு சன்னதி கதவை சாத்திவிட்டு உள்ளே செல்வார்கள்.

அந்நேரத்தில் "கௌசல்யா சுப்ரஜா ராம..." என்ற சுப்ரபாதம் வெளியே நிற்கும் ஒரு குழுவினரால் பாடப்படும்.

சன்னதிக்குள் தீப்பந்தம் கொண்டு செல்பவர் அங்குள்ள விளக்குகளை எல்லாம் ஏற்றுவார்.

பின்னர் வீணையை இசைக்க, வெங்கடா சலபதி அருகில் "போக ஸ்ரீனிவாச மூர்த்தி" பெருமாள் விக்ரஹத்தைக் கொண்டு வந்து அமர்த்துவார்கள்.

அவரை முதல் நாள் இரவில் ஒரு தொட்டிலில் படுக்க வைத்திருப்பார்கள்.

அந்த தொட்டிலிலிருந்து சுவாமியை எடுத்து மூலவர் அருகில் அமரவைப்பர்.

சுப்ரபாதம் பாடி முடித்ததும் சன்னதி திறக்கப் படும்.

ஸ்வாமிக்கு பாலும் வெண்ணெயும் படைத்து "நவநீத ஹாரத்தி எனப்படும் தீபாராதனை செய்யப்படும்.

"விஸ்வரூப தரிசனம் என்றும் இதை சொல்வதுண்டு.

இந்த சேவையைக் காண ஒரு நபருக்கு கட்டணம் ரூ.120/.

மூன்று மாதங்களுக்கு முன்பே முன்பதிவு செய்பவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

திருப்பதி மலையிலுள்ள ஆகாய கங்கை தீர்த்தத்திலிருந்து மூன்று குடங்களில் புனிதநீர் வந்துசேரும்.

ஒரு குடம் நீரை காலை பூஜைக்கும், மற்றொன்றை மாலை பூஜைக்கும், இன்னொன்றை இரவு பூஜைக்கும் எடுத்து வைப்பார்கள்.

(பிரம்மோற்ஸவ காலத்தில் மட்டும் யானைமீது தீர்த்தம் எடுத்து வரப்படும்).

ஒரு குடம் தண்ணீரை ஐந்து வெள்ளி பாத்தி ரங்களில் நிரப்புவார்கள்.

பின்னர் உத்தரணி (ஸ்பூன் போன்றது)யில் தண்ணீர் எடுத்து சுவாமி முன்பு அர்ச்சகர் நீட்டு வார்.

ஸ்வாமி அதில் முகத்தை அலம்பிக் கொள்வார் என்பது ஐதீகம்.

பின்னர் மீதி உள்ள தண்ணீரை சுவாமியின் பாதத்தில் அபிஷேகம் செய்வார்கள்.

முழு மூர்த்திக்கும் அபிஷேகம் நடப்பதில்லை.

மூலவருக்கு பதிலாக அருகிலுள்ள போக ஸ்ரீனிவாச மூர்த்திக்கு அபிஷேகம் செய்யப்படும்.

அப்போது சுவாமியின் இடுப்பில் ஒரு துண்டை கட்டி வாசனை தைலம் தேய்த்து, மஞ்சள் கலந்த நீரால் அபிஷேகம் நடத்துவார்கள்.

பிறகு பசும்பால்,



கீதா–ராஜன்

சந்தனம், தேன், மீண்டும் மஞ்சள் தண்ணீர் என வரிசையாக அபிஷேகம் நடக்கும்.

அபிஷேகத்திற்கு பிறகு வஸ்திரம் சாத்தப்படும்.

ஸ்வாமிக்கு நெற்றியில் நாமம் இடுவார்கள். பிறகு அவர் முன்னால் கண்ணாடியை காட்டுவார்கள்.

குடை பிடித்து, சாமரத்தால் விசிறுவார்கள். இதன்பிறகு தீபாரா தனை நடக்கும்.

இத்துடன் காலை சுப்ரபாதபூஜை நிறைவடையும்.

சுப்ரபாத பூஜையை அடுத்து, காலை 3.30 முதல் 3.45 வரை சன்னதியை திரை போட்டு மறைத்து, சுத்தி எனப்படும் தூய்மை செய்யும் பணி நடக்கும்.

அந்த நேரத்தில் முதல் நாள் சுவாமிக்கு அணிந்த மாலைகளை கோயிலுக்கு பின்னால் உள்ள பூக் கிணறில் கொண்டு சேர்ப்பார்கள்.

பின்னர் புதிய மாலைகள் சுவாமிக்கு கொண்டு வரப்படும். இதைக் கொண்டுவர ஜீயங்கார் என்பவர் உள்ளார்.

ஜீயங்காருக்கு உதவியாக ஏகாங்கி என சொல்லப்படுபவர் இருக்கிறார்.

ஜீயங்கார் முன்னால் நடக்க ஏகாங்கி பின்னால் வருவார். கூடவே முரசு வாத்தியத்துடன் ஒருவர் செல்வார்.

இவர்களுக்கு பின்னால் பள்ளி எழுச்சி பாட இருவர், திருப்பாவை பாட இருவர், புருஷ ஸுக்தம் சொல்ல இருவர் என ஒரு கோஷ்டியே திரண்டு வரும்.

பூ கட்டுவதற்கு என "யமுனாதுறை" என்ற இடம் கோயிலில் இருக்கிறது. அங்கிருந்து பூமாலைகள் சுவாமிக்கு அணிவதற்காக எடுத்து வரப்படும்.

காலை 3.45 மணிக்கு "தோமாலை சேவை" ஆரம்பமாகும்.


www.aanmeegamalar.com

சன்னதிக்கு பூக்கூடை வந்தவுடன் அர்ச்சகர் ஸ்வாமியின் மார்பில் இருக்கும் மகாலட்சுமிக்கு முதலில் பூச்சரத்தை சாத்துவார்.

பின்னர் ஸ்வாமிக்கு மாலைகள் சாத்தப்படும்.

பெருமாளுக்கு மாலை சாத்தி முடித்து அடுக்கு தீபாராதனை செய்யப்படும். இதற்கு 25 நிமிடம் ஆகும்.

அதுவரை ஜீயங்காரும் மற்றவர்களும் திருப் பள்ளி எழுச்சி, திருப்பாவை பாசுரங்களை பாடுவார்கள்.

இதை பார்ப்பதற்கு ஒரு நபருக்கு கட்டணம் ரூ.220.

இதற்கும் மூன்று மாதங்களுக்கு முன்பே முன்பதிவு செய்ய வேண்டும்.

இந்த சேவை ராமானுஜர் காலத்தில், "தோள் மாலை சேவை என சுத்த தமிழில் அழைக் கப்பட்டது.

பின்னர் தெலுங்கில் "தோமாலா சேவா என மாறிவிட்டது.

**கொலுவு தர்பார்:**

ஏழுமலையான் கோயிலில் தோமாலை சேவை காலை 4.30 மணிக்கு நிறைவுபெறும்.

இதையடுத்து கொலுவு நிகழ்ச்சி 15 நிமிடங் கள் நடக்கும்.

இதற்காக உள்ள "கொலுவு ஸ்ரீநிவாசமூர்த்தி" விக்ரகம் ஏழுமலையான் சன்னதிக்குள் இருக் கிறது.

இந்த விக்ரகத்தை வெள்ளி பல்லக்கில் வைத்து, வெள்ளி குடை பிடித்து சன்னதியில் இருந்து வெளியில் எடுத்து வருவர்.

ஒரு மறைவிடத்தில் வைத்து, எள்ளுப்பொடி, வெல்லம், வெண்ணெய் நைவேத்தியம் செய்து அர்ச்சனை நடத்தி ஆரத்தி காட்டுவர்.

பிறகு அர்ச்சகர் ஒரு பஞ்சாங்கத்தை பிரித்து, அன்றைய நாள், நட்சத்திரம், திதி உள்ளிட்ட விவரங்களை வாசிப்பார்.

அதன்பிறகு முதல்நாள் உண்டியலில் எவ்வளவு பணம் சேர்ந்தது, தங்கம், வெள்ளி வரவு ஆகிய விபரங்களை சுவாமியிடம் சொல்வர்.

மூலவரே கொலுவு ஸ்ரீநிவாசமூர்த்தியின் வடிவில் வெளியே வருவதாக ஐதீகம் உண்டு.

மூலவரிடமே நேரடியாக கணக்கு வழக்கு களைச் சொல்வதாக நம்பிக்கை. இந்த காட்சி யைக்காண பக்தர்களுக்கு அனுமதி இல்லை.

**முதல் மணி:**

அர்ச்சனாந்திர தரிசனம் முடிந்ததும்,



வெங்கடாசலபதிக்கு முதல் நைவேத்தியம் படைக்கப்படும்.

அப்போது இரண்டு மணிகள் ஒலிக்கப்படும்.

அவருக்கு முதலில் தயிர்சாதம் படைக்கப்படும்.

மூலவருடன் விஷ்வக்சேனர், கருடன் மற்றும் நித்யசூரிகளுக்கும் (முக்தி பெற்றவர்கள்) இதே நைவேத்தியம் படைக்கப்படும்.

**இரண்டாவது மணி:** இதையடுத்து மீண்டும் மணி அடிக்கப்பட்டு 2வது முறையாக நைவேத் தியம் படைக்கப்படும்.

அப்போது வராக புராணத்தில் உள்ள 108 நாமாக்களை கொண்ட அஷ்டோத்திர நாமா வாசிக்கப்படும். இதை பக்தர்கள் யாரும் பார்க்க முடியாது.

ஆனால், ஸ்வாமிக்கு நைவேத்தியம் செய்யப் படும் செருப்புலு மற்றும் பணியார வகைகள் ஒரு குறிப்பிட்ட அளவு பக்தர்களுக்கு மட்டும்

பிரசாதமாக வழங்கப்படும்.

**சஹஸ்ரநாம அர்ச்சனை:**

கொலுவு தரிசனத்தை அடுத்து சகஸ்ரநாம அர்ச்சனை நடக்கும்.

விஷ்ணு சகஸ்ரநாமம் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால் வெங்கடாசலபதிக்கென தனியாக ஆயிரத்தெட்டு பெயர் சொல்லி சகஸ்ர நாமம் இருக்கிறது.

இதை செய்வதற்கு ஒரு நபருக்கு ரூ.120 கட்டணம். காலை 4.45 மணி முதல் 5.30 வரை இந்த அர்ச்சனை நடக்கும்.

நமது பெயர், குலம், கோத்திரம் ஆகியவற்றை முன் கூட்டியே சொல்லிவிட்டால் நமது பெயரில் அர்ச்சனை செய்வார்கள்.

இந்த தரிசனத்தின் போது பக்தர்களை அங் குள்ள ஊழியர்கள் யாரும் தள்ளி விட மாட்டார்கள்.

சகஸ்ரநாம அர்ச்சனை முடிந்து பூஜை நடத்தப் படும். இந்த பூஜைக்கு "அர்ச்சனாந்தர தரிசனம் என்று பெயர்.

இதை பார்க்க ஒரு நபருக்கு ரூ.200 கட் டணம். மூன்று மாதங்களுக்கு முன்பே பதிவு செய்துகொள்ள வேண்டும்.

காலை 5.30க்கு துவங்கும் இந்த பூஜை 6.30 மணி வரை நடக்கும்.

**சகஸ்ரதீப அலங்கார சேவை:** ஊஞ்சல் மண்டபத்தில் தினமும் மாலை 5.30மணிக்கு சகஸ்ர தீப அலங்காரம் (ஆயிரம் தீபங்கள்) செய் யப்படும். அப்போது அன்னமயா சங்கீர்த்தனம் பாடப்படும்.

இதற்கும் ஆயிரம் ரூபாய் கட்டணம் உண்டு. 5 பேர் பங்கேற்கலாம்.

அவர்களுக்கு வஸ்திரம் பிரசாதமாக வழங்கப் படும். திருமணமானவர்கள் இந்த வைபவத்தில் பங்கேற்பது சிறப்பானது.

ஆபரணம் இல்லாத நாள்: வியாழக்கிழமைகளில் வெங்கடாசலபதிக்கு முக்கிய ஆபரணங்கள் எதுவுமின்றி வேட்டி மற்றும் வெல்வெட் அங்கி அணிவிக்கப் படும். அதன் மேல் அங்கவஸ்திரம் மட்டும் சாத்து வார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு "சாலிம்பு என்று பெயர்.

மேலும் ஸ்வாமிக்கு வழக்கமாக அணி விக்கப்படும் திருநாமத்திற்கு பதிலாக நெற்றி யின் மத்தியில் மெல்லிய நாமம் மட்டும் அணிவிக்கப்படும்.

**கல்யாண உற்சவம்:**

திருப்பதி கோயிலில் உள்ள சம்பங்கி



பிரகாரத்தில் திருமண ஹால் இருக்கிறது.

அங்கு உற்சவரான மலையப்ப ஸ்வாமிக்கும் ஸ்ரீதேவி, பூதேவிக்கும் திருமணம் நடத்தப்படும்.

பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்து இந்த திருமணம் நடந்து வருவதாக சொல்லப்படுகிறது.

திருமண தடை உள்ள ஆண், பெண்கள் இந்த நிகழ்ச்சியில் முக்கியமாக கலந்துகொள்கிறார்கள்.

ஸ்வாமிக்கும் தாயார்களுக்கும் மத்தியில் ஒரு திரை போடப் படும். பின்னர் அந்த திரை அகற்றப்பட்டு ஹோமங்கள் நடக்கும்.

ஒரு புரோகிதர் தாயார்களுக்கும் சுவாமிக்கும் திருமணம் செய்துவைப்பார்.

விழாக்காலங்களில் மட்டும் இந்த திருமணம் நிறுத்தி வைக்கப்படும்.

நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களுக்கு இரண்டு லட்டு, ஐந்து வடை, ஒரு பட்டு அங்கவஸ்திரம் மற்றும் ரவிக்கைத் துணி பிரசாதமாக தரப்படும்.

கல்யாண வைபவம் ஒருமணி நேரம் நடக்கும். பகல் 12 மணிக்கு திருமண உற்சவம் துவங்கும்.

திருமண உற்சவத்திற்கு கட்டணம் ரூ.1000/. இரண்டுபேர் அனுமதிக்கப்படுவார்கள்.

**ஊஞ்சல் சேவை:**

மாலை 4 மணிக்கு கோயிலுக்கு வெளியே உள்ள ஊஞ்சல் மண்டபத்தில் மலையப்ப ஸ்வாமி, ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஊஞ்சலில் ஆடும் காட்சியை பார்க்கலாம். இதை "டோலோத்ஸவம் என்பர்.

அப்போது வேத பாராயணம் செய்யப்படுவதுடன் மங்கள வாத்தியங்களும் முழங்கும்.

ஆயிரம் ரூபாய் செலுத்தி ஐந்து பேர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கலாம்.

அவர்களுக்கு 5 லட்டு, ஒரு அங்கவஸ்திரம் மற்றும் ரவிக்கைத்துணி தரப்படும்.

மாலை 5 மணிக்கு இந்த நிகழ்ச்சி நிறைவடையும்..

– கீதாராஜன்:
செல்: 9444229203

# சித்திரை சிறப்புகள்

தமிழ்ப் புத்தாண்டு என்று நாம் சொல்லும் வருஷப் பிறப்பு, உலகத்துக்கே பிறந்த நாள் ஆகும். உலகம் என்றால் மக்கள் சமூகம் மற்றும் பிற உயிரினங்களும் சேர்ந்த ஒரு தொகுப் பாகும். இவை அனைத்தும் தோன்றிய நாள் உலகத்துக்குப் பிறந்த நாள் ஆகிறது. அந்தப் பிறந்த நாள் முதற்கொண்டு சதுர்யுகங்கள் கணக்கிடப்பட ஆரம்பித்தன.

அன்றைக்கு சூரியன் உள்ளிட்ட அனைத்து கிரகங்களும், (ராகு, கேது நீங்கலாக) மேஷ ராசியில் பூஜ்யம் பகையில் இருந்தன. அந்த இடத் தில் ஆரம்பித்து விண் வெளி மண்டலத்தை ஒரு முறை சுற்றி வர சூரியன் எடுத்துக் கொள்ளும் காலம் ஒரு வருடம் என்பதாகும். விண்வெளி மண்டலம் வட்ட வடிவமாக இருக்கவே, அதில் 360 பாகைகள் உள்ளன.

அவற்றை 12–ஆகப் பிரித்து ஒவ் வொன்றும் ஒவ்வொரு மாதமாகக் கணக்கிடப்படுகிறது. அதாவது 30 பாகை கொண்டது ஒருமாத மாகும். 12 மாதங்கள் கொண் டது ஒரு வருடமாகும்.

இந்தப் பயணம் ஆரம்பித்த நாளை வருஷப் பிறப்பு என்று வழி வழியாகக் கொண்டாடி வந்திருக்கின்றனர்.

இதற்கு சித்தர்கள் எழுதியுள்ள நாடி ஜோதி டக் குறிப்புகளே சாட்சி. நாடி ஜோதிடத்தில் நாள், நட்சத்திரம், மாதப் பெயர்களை மறைவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அப்படிப்பட்ட குறிப்புகளில் சித்திரையை ‘முதல் மாதம்’ என்றும், பங்குனியைக் ‘கடை மாதம்’ என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல சித்திரையில் சூரியன் சஞ்சரிக்கும் மேஷ ராசியைத் ‘தலை’ என்றும், ‘தலை ராசி’ என்றும் சொல்லியுள்ள குறிப்புகள் உள்ளன.

இடைக்காட்டுச் சித்தர் அவர்கள் மாதபலன் களையும், வருட பலன்களையும் எழுதி வைத்துள் ளார். அவற்றை இன்றுவரை நாம் பின் பற்றி வருகிறோம். அவரும் சித்திரை தொடங்கியே வருடத்தைக் கணக்கிட்டுள்ளார்.

அதேப்போன்று உலகில் உயிரினம் வளர்வதற் குக் காரணமான பல முக்கிய அவதாரங்களும் சித்திரையில்தான் நடந்தன என்பது சித்திரையின் சிறப்பை மேலும் உறுதி செய்கிறது.


சதுர் மஹாயுகம் ஆரம்பித்தது சித்தி ரை முதல் தேதியன்றுதான்.

சித்திரையின் வளர்பிறை துவிதி யையில் கிருதயுகம் பிறந்தது.

சித்திரையின் வளர்பிறைப் பஞ்சமியில் கூர்ம கல்பம் பிறந் தது.

சித்திரையின் வளர்பிறை சப்தமியில் கங்கை நதி பிறந்தது.

சித்திரையின் வளர் பிறை திரயோதசியில்



மச்ச அவதாரம் நடந்தது.

சித்திரையின் தேய்பிறைப் பஞ்சமியில் வராஹ அவதாரம் நடந்தது.

மேற்கண்டவைகள் அனைத்தும் இதிகாசங் களில் குறிப்பிடப்பட்டுள்ளது, இந்த நிகழ்விலி ருந்து சித்திரையின் அவசியத்தை எளிதாக அறிந்து கொள்ளலாம்.

## சித்திரையை எவ்வாறு கொண்டாடுவது

சித்திரை முதல் நாளன்று வீட்டை நன்றாக கூட்டி தூய்மை செய்ய வேண்டும். வாசலில் கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும். வாயிற்படி களுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு, மாவிலைத் தோரணங்களை கட்டி மங்கலம் சேர்க்க வேண் டும். வாயிற்படி நிலைவாயிலில் மஞ்சள் பூசி, சாணத்தால் மெழுகி, அழகிய மாக்கோலமிட் டால் திருமகள் வாசம் செய்வாள் என்பது நம்பிக் கையாகும்.

அத்தோடு மஞ்சள், குங்குமம் ஆகியவை நோய்க்கிருமிகளும் துஷ்ட தேவதைகளும் வாசல்படியை தாண்டி வராமல் தடுக்கும் சக்தி களாகும். புதுவருட தினத்தில் நம் நலம் காக்கவே இந்நடைமுறை வழக்கத்துக்கு வந்தது.


ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் புதிய விசிறிகளை தானம் செய்ய வேண்டும். சித்திரை பிறப்பதற்கு முந்தைய நாள் இரவு சாப்பாடு முடிந்தபிறகு பூஜை அறையை தூய்மை செய்து கோலமிட்டு வைத்து விட வேண்டும். வீட்டிலுள்ள பொன், வெள்ளி நகைகள், உட்பட அனைத்து ஆபரணங்களையும் பணம், நிலைக்கண்ணாடி, வெற் றிலை, பாக்கு, பழங்கள், தேங் காய், மலர்கள் முதலிய மங் கலப் பொருள்களையும் தயா ரித்து, ஒரு மனையின் மீது இட்டு அதற்கு அழகியகோலமிட்டு, பூஜைக்குரிய தெய்வத் தின் முன் வைக்க வேண்டும்.

அரிசி, பருப்பு, வெல்லம்,பலா, மாம் பழம், வாழைப்பழம் ஆகியவற்றையும் வைத்து மறுநாள் காலை, சித்திரை மாதப்பிறப்பன்று அதிகாலையில் முதன் முதலாக வீட்டில் மூத்த பெண்மணி எழுந்து குளித்து புத்தாடை உடுத்தி இறைவன் முன்பு குத்துவிளக்குகளையும், ஊதுவத்திகளையும் ஏற்றி வைப்பார். அதற்கு பின்பு, அவர் வீட்டில் தூங்கும் ஒவ்வொருவரையும் எழுப்பி, கண்களை மூடிய நிலையிலேயே சுவாமியின் முன்பு அழைத்துச் சென்று, கண் களை திறக்கச் சொல்வார். பூஜைக்குரிய தெய்வத்தையும், பூஜைக்கு வைத்துள்ள மங்கலப் பொருட்களையும் முதன் முதலாக தரிசிக்கும்படி செய்வார். இவ்வாறு செய்தால் வருடம் முழுவதும் மகிழ்ச்சி பொங்கும் எனவும் மங்கலப் பொருள்கள் செழித்து இருக்கும் என்பது நம்பிக்கை.

## மருத்து நீர்

இந்த புண்ணிய காலத்தில் சகலரும் மருத்து நீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையையும், காலில் புங்கம் இலையையும் வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும். மருத்து நீர் வைத்தல் என்பது முக்கிய விடயமாக புதுவருட தினத்தில் கருதப்படுகிறது.

இம்மருத்துநீர் தாழம்பூ, தாமரைப்பூ, மாது ளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங் கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், திற்பலி மற்றும் சுக்கு என்பவற்றை நீரிலே கலந்து காய்ச்சப்படும்.



# தமிழ் வருடப்பிறப்பும், தெலுங்கு வருடப்பிறப்பும்

தமிழ் வருஷப் பிறப்பு, தெலுங்கு வருஷப்பிறப்பு என்று வித்தியாசங்கள் இருக்கின்றனவே என்று கேட்கலாம். இரண்டும் ஒன்றுதான், தெலுங்கு வருஷப் பிறப்பை 'யுகாதி' என்று சொல்வதிலிருந்து சதுர் யுகம் ஆரம்பித்த முதல் நாளையே அது குறிக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். சதுர் யுகம் ஆரம்பித்த நேரத்தில் சூரியனும், சந்திரனும் ஒன்றாக இருந்தனர். சூரியனும் சந்திரனும் ஒன்றாக இருந்தால் அது அமாவாசை ஆகும். அதற்கு மறுதினமான வளர்பிறை பிரதமையில் யுகங்கள் ஆரம்பித்தன. அது மேஷ ராசியின் பூஜ்யம் பாகையில் நிகழ்ந்தது. அதற்குப் பிறகு அனைத்துக் கிரகங்களும் அதே இடத்தில், மேஷ ராசியின் பூஜ்யம் பாகையில் சந்தித்துக் கொள்வதில்லை. ஒவ்வொரு கிரகத்துக்கும் இருக்கிற வேக வித்தியாசத்தால் இப்படி இருக்கிறது. தமிழ் நாட்டில் சூரியனது நிலையை மட்டுமே நாம் கணக்கில் கொள்கிறோம், தெலுங்கர்கள் உட்பட பிற மாநிலத்தவர்கள் சந்திரன் இருந்த இடத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

சூரியன் மேஷ ராசியின் பூஜ்யம் பாகையில் நுழைவதற்கு முன், சூரியனும், சந்திரனும் சேரும் நாளின் அடிப்படையில் அவர்கள் வருடப் பிறப்பு கொண்டாடவே, தமிழர்கள் கொண்டாடும் தமிழ்ப் புத்தாண்டுக்கும், மற்ற மாநிலத்தவர் கொண்டாடும் யுகாதிப் பண்டிகைக்கும் சிறிது வித்தியாசம் வருகிறது. ஆனால் இரண்டுமே சித்திரையில் சூரியன் நுழைவதை முன்னிட்டுக் கணக்கிடப்படுகின்றன.



மருத்து நீர் வைத்து நீராடினால் புத்தாண்டின் நல்ல பலன்களை பெறலாம் என்பது நம்பிக்கை ஆகும்.

## அறுசுவை உணவு

சித்திரை மாதத்தில் சூரியன் மேஷ ராசியில் மிகவும் உச்சமாக பிரகாசிப்பதால் அன்றைய தினம் பானகம், நீர், மோர், பருப்புவடை ஆகிய வற்றை நைவேத்தியம் செய்ய வேண்டும். இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவை கொண்ட உணவுகளை சமைத்து உண்பர்.

மதிய உணவில் வேப்பம்பூ பச்சடி, மாங்காய்ப் பச்சடி, பருப்பு வடை, நீர்மோர், பருப்பு, பாயாசம், மசால்வடை போன்றன இடம்பெறுதல் அவசியம். வேப்பம் பூ கசக்கும் என்றாலும் மனித உடலிலுள்ள ரத்தத்தை தூய்மை செய்வதில் வேப்பம் பூவுக்கு நிகராக வேறு எந்த மூலிகையும் இல்லை. இதற்காகவே இந்த உணவு உண்ணப்படுகிறது. அத்துடன் உணவை விருந்தினருடன் உண்டு மகிழ்ந்தால் அந்த ஆண்டு முழுவதுமே குதூகல மாக இருக்கும் என்பது மக்களின் முக்கிய நம்பிக்கையாகும். இதற்காகவே விருந்தினர் வருகையும் விருந்தோம்பலும் நம் பாரம்பரியமாக மாறியது.

## கைவிஷேசம்

சித்திரைப் புதுவருடத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் கைவிஷேசமாகும். ஆரம்ப காலத்தில் வீட்டின் தலைவி உரிய சுப நேரத்தில் சிறிய மூலிகைப் பொட்டலம் ஒன்றினை கிணற்றுக்குள் போட்டுவிட்டு பிறக்கும் புத்தாண்டு நிமித்தம் முதல் முறையாக தண்ணீரை கிணற்றிலிருந்து வெளியில் எடுப்பதையே கை விசேடமாக கருதப்பட்டது. ஆயினும் நாளடவில் கைவிசேடம் என்பது சுபமுகூர்த்தத்தில் பணத்தை கொடுப்பதும் எடுப்பதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நல்ல நேரத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்தும்,

வயதில் மூத்தவர்களிடமிருந்தும், அலுவலகங்கள், விற்பனை நிலையங்கள், தொழிற்சாலைகள் என்பவைகளில் வேலை செய்வோர் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்தும் புதுவருடத்தில் முதல் அன்பளிப்பாக வெற்றிலையில் பாக்கு, நெல்லு காசு என்பவற்றை வைத்து குத்து விளக்கின் முன்னாலே வைத்து கொடுப்பர்கள்.

பணத்தை கைவிஷேசமாக பெற்றுக்கொள்வார்கள். கொடுக்கபட்ட எல்லாவற்றையும் எண்ணி (நெல்லு உட்பட) அது ஒற்றை விழுந்தால் நல்ல பலன் என்பது ஐதீகம். கைவிசேடம் பரி மாறிக்கொள்வது என்பது ஒரு பாரம்பரியமான வழக்கமாகும்.

மூத்தோர்களிடமிருந்து கைவிசேடம் பெற்றால் அந்த ஆண்டு முழுவதும் பணவரவும் பல நன்மைகளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கைவிசேடமாக பெற்ற பணத்தை அந்த ஆண்டு முழுவதும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதும் நம்பிக்கையாக கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது.

சித்திரைக்கு உள்ள மற்றொரு முக்கியச் சிறப்பு, அஸ்வினி நட்சத்திரத்தில் அது ஆரம்பிக் கிறது. அஸ்வினி தேவர்கள் என்னும் இரட்டையர் இந்த நட்சத்திரத்தின் அதிபதிகள் ஆவர்.

அவர்களைக் குதிரைகளாகக் கொண்டு ஒற்றைச் சக்கரத்தேரில் சூரியன் வான் மண்டலத்தில் பவனி வருகிறான் என்று ரிக் வேத மந்திரங்கள் தெரிவிக்கின்றன. அஸ்வினி நட்சத்திரத்துக்கு மருத்துவர் என்ற சிறப்புப் பெயர் உண்டு. அஸ்வினி நட்சத்திரத்துக்கு அதிபதியான அஸ்வினி தேவர்கள், தேவ மருத்துவர்கள் எனப்படுகிறார்கள்.

இதன் முக்கியத்துவதைச் சொல்லும் ரிக் வேத ஸ்லோகம் ஒன்றுள்ளது. ‘சூரியன் அஸ் வினியில் புறப்பட்டபோது இருந்தது போல, எல்லா தெய்வங்களும் எங்களுக்கு ஆயுளைக் கொடுக்கட்டும்’ என்கிறது அந்த ஸ்லோகம். அஸ்வினியில் சூரியன் பிறந்ததால் பல கோடி வருடங்கள் சூரியன் சென்று கொண்டு இருக் கின்றான்.

சித்திரையில் வரும் மேஷ ராசி தொடங்கி கால புருஷன் இயங்குகிறான். மக்கள் வாழ்க் கை, பிறப்பு, இறப்பு என எல்லாவற்றையும் இயக்குகிறவன் இந்தக் கால புருஷன் ஆவான். மக்களை ஆள்வதால் வருடத்துக்கு “ஆண்டு” என்று பெயர். 12 மாதங்களும் அந்த கால புருஷனின் உடல் உறுப்புகளாகச் சித்தரிக்கப் படுகின்றன. மனிதனைப் பீடிக்கும் நோய்



நொடி போன்றவை எல்லாம் அந்தந்த மாதத்தில் அந்தந்த உறுப்புகளில் ஏற்படுகிறது. சித்திரை தலைப்பகுதியாக உள்ளது இந்த மாதத்தில்தான் வெயில் காரணமாக வரும் தலை வலி, மயக்கம் போன்றவை பீடிக்கிறது. இதுபோன்று ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு மனித உறுப்புகளுக்கான நோய்களை தரும், தை மாதம் என்பது கால புருஷனது கால முட்டியாகும். தை மாதக் குளிரில் மூட்டு நோய், முட்டி வலி போன்றவை அதிகரிக்கும்.

சித்திரை மாதம் மேஷ ராசியில் சூரியன் நுழையும் நேரம் ‘ஜக லக்னம்’ எனப்படுகிறது. உலகத்தின் லக்னம் என்பது பொருள். உலக நடப்புகளை அதைக் கொண்டுதான் சொல்ல முடியும். சாதாரண மக்களுக்குப் பிறந்த லக்னமும், சந்திர லக்னமும் முக்கியம். அது போல உலகத்துக்குச் சூரிய லக்னம் முக்கியம். அதைக் கொண்டு ஒரு நாட்டுக்குப் பலன் சொல்ல முடியும். இதன் காரணமாகத்தான் சித்திரை தமிழ்வருடப்பிறப்பின்போது பஞ்சாங்கம் படிக்கப்படுகிறது.

அக்காலத்தில் ‘மந்திரி சபையே’ சித்திரை வருடப் பிறப்பின் அடிப்படையில் கணிக்கப்பட்டது. அதனால் பஞ்சாங்கம் படிப்பது வருஷப்பிறப்பின் முக்கிய அம்சமாகும். சித்திரை வருஷப் பிறப்பைப் பொறுத்தே, நாடு, மக்கள், பிற உயிரினங்கள், விலை வாசி, விவசாயம், செல்வப் பெருக்கு என்று எல்லாவற்றையும் கணிக்க முடியும். முற்காலத்தில் ராஜாக்கள் சித்திரை வருஷப் பிறப்பின் போது பயபக்தியுடன் கடவுளை வழிபட்டு, பஞ்சாங்கப் பலனைக் கேட்டார்கள். அந்தப் பலன்களின் அடிப்படையில், நாடு நலம் பெற என்ன முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும் என்று முடிவெடுப்பார்கள்.

# சித்திரை மாத தமிழ் வருடப் பிறப்பு இயற்கை காரணம்

காலங்களில் நான் வஸந்தம் என்று பகவான் கிருஷ்ணன் கூறியுள்ளபடி, இளந்தளிரும் பூக்கஞளும் பூத்துக் குலுங்கும் ரம்மியமான காலம் இது.

### சரித்திரக் காரணம்

ராமனால் வாலி வதம் நடந்த தினம். ராவணாதிகளை அழித்து, ஸ்ரீராமனாக அயோத்திக்கு திரும்பிய தினம். ஷாலிவாஹன ஸகாப்தம் ஆரம்பித்த தினம்.

### ஆன்மீக காரணம்

ப்ரம்மா இன்றே ப்ரபஞ்சத்தைப் படைத்தார். ஸத்ய யுகம் ஆரம்பித்த தினம். மூன்றரை முஹுர்த்தங்களில் ஒரு சுப முஹுர்த்தம் இன்றைய தினமாகும்.

### உலகமளாவிய கொண்டாட்டம்

தமிழ் புத்தாண்டு, வசந்த காலஆரம்பத்தில் சித்திரை மாத முதல் நாளன்று கொண்டாடப்படுகிறது. சித்திரை மாத வருடப்பிறப்பு தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் கொண்டாடப்படுகின்றது. அதே நாளில் அஸ்ஸாம், மேற்கு வங்காளம், கேரளா, மணிப்பூர், திரிபுரா, பீகார், ஒடிஸா,பஞ்சாப், உத்தரபிரதேசம், உத்தராக்கண்ட், ஹிமாசல பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களோடு கூட நேபாளம், பங்களாதேஷ், மியான்மர்,கம்போடியா,லாவோஸ், தாய்லாந்து மற்றும் இலங்கை யிலும் புத்தாண்டு வெவ் வேறு பெயர்களில் கொண் டாடப்படுகின்றன.

இலங்கைத் தமிழர்களும் தமிழ்ப்புத்தாண்டன்று முதல் பண நடவடிக்கையை மேற்கொள்கின்றனர். இதை கைவிசேஷம் எனக் கூறுகின்றனர்.

**சங்க இலக்கியத்தில் தமிழ்ப் புத்தாண்டு:** தமிழ் புத்தாண்டை பற்றி சங்க இலக்கிய நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. நெடுநல்வாடையில் நக்கீரர், சூரியன் ஒவ்வொரு வருடமும் மேஷ ராசி சித்திரை மாதத்தில் ஆரம்பித்து மற்ற 11 ராசிகளையும் சுற்றி வருகிறார் என எழுதியுள்ளார். புறநானூறு, தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலும் தமிழ் புத்தாண்டு பற்றி எழுதப்பட்டுள்ளன.

**கோவில்களில் தமிழ் புத்தாண்டு:** கோவில் நகரமான மதுரையில் மீனாக்ஷி அம்மன் கோவிலில் சித்திரைத் திருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தமிழ் புத்தாண்டில் திருவிடைமருதூரிலும் கும்பகோணத்திலும் தேர்த் திருவிழா நடைபெறுகின்றன.

தமிழ்ப் புத்தாண்டு கொண்டாடும் வழிமுறை

புத்தாண்டுக்கு முந்தைய தினம் ஒரு தட்டில் முக்கனிகள், வெற்றிலை, பாக்கு, தங்க வெள்ளி நாணயங்கள், ஆபரணங்கள், மலர்கள் ஆகியவற்றை நிரப்பி கண்ணாடி முன் வைப்பது வழக்கம். இது கேரளாவில் கொண்டாடப்படும் விஷுவை ஒத்தது. வருட ஆரம்பத்தில் இதைப் பார்ப்பது மிகவும் சுபம் என்பது நம்பிக்கை. வீட்டு வாயிலில் பல வடிவமைப்புகளில் கோலங்கள் போடும் வழக்கமும் உள்ளது.சித்திரை மாத புத்தாண்டை தமிழ் மக்கள் விருந்துடன் கொண்டாடுகின்றனர். விருந்தில் முக்கியமாக வேப்பம் பூ, வெல்லம், சேர்த்த மாங்காய் பச்சடி பரிமாறப்படுகிறது. இதில் அறுசுவைகளும் அடங்கியது போல் நம் வாழ்விலும் அனைத்து இன்ப துன்பங்களையும் சமநிலைப் பாங்குடன் நோக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தம்.

2021ல் வரப் போகும் சித்திரை மாத தமிழ்ப் புத்தாண்டின் பெயர் பிலவ வருடம் ஆகும்

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626



# ஆன்மீக வழியில் அமைதி

15

மனிதர்கள் தானதர்மங்கள், தியானம் தவம் யாகம் போன்ற ஆன்மீகச் செயல்களில் ஈடுபடுவதன் மூலம் அவன் புண்ணியப் பலன்களை அடையலாம். நமது கர்மங்கள் மூலம் கிடைக்கும் ஞானம் கர்மஞானம் அல்லது தர்மஞானம் என்று ஆன்மிகம் கூறுகிறது. கர்மத்தின் மூலம் அதர்மச் செயல்களைச் செய்தல் அதாவது தீமை தரக்கூடிய செயல்களை நாம் செய்வதன் மூலம் அடையும் பாவங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கு அதர்மஞானம் நமக்குத் தேவை. எனவே நம் கர்மத்தில் பாவச்செயல்கள், புண்ணியச் செயல்கள் இவற்றை அறிந்து கொள்வதற்கு, அதனை செயல்படுவதற்கு இந்த தர்மஞானம், அதர்மஞானம் இரண்டும் மனிதனுக்குத் தேவைப்படுகிறது.

மனிதன் செய்யக்கூடிய புண்ணியச் செயல்கள் அனைத்தும் கர்மஞானம் அல்லது தர்மஞானம் எனப்படும். மனிதன் செய்யக்கூடிய பாவத்தின் செயல்கள் அனைத்தும் அதர்மஞானம் எனப்படும். நாம் தானதர்மங்கள் போன்ற புண்ணியமான செயல்களைப் பற்றி அறிந்து கொள்வதைப்போல, பாவச்செயல்களையும் அறிந்து கொள்வதற்கும், அவற்றிலிருந்து நாம் விலகிச்செல்வதற்கும், பாவச்செயல்களைச் செய்யாமல் விழிப்புணர்வுடன் இருப்பதற்கும் அதர்மஞானம் பற்றி நமக்கு அறிவு வேண்டும். இதனை வேதங்கள், உபநிடதங்கள் இதிகாசங்கள் நன்கு நமக்கு விளக்கிக் கூறுகிறது.

நமக்கு எந்தச் செயல்கள் செய்தால் புண்ணியம் கிடைக்கும். எந்தச் செயல்கள் செய்தால் பாவம் நம்மிடம் வந்து சேரும் என்ற ஞானத்தினை அறிவை வேதங்கள், சாஸ்திரங்கள் கூறுகிறது. தர்மநியதிப்படி புண்ணியத்தை செய்தால் அமைதியான நித்தியமான இன்பம் மகிழ்ச்சியெல்லாம் கிடைக்கிறது. மனிதன் அவனையும் அறியாமல் பாவச்செயல்களை செய்து விட்டால், அதிலிருந்து மீள்வதற்கு அதனைப் போக்குவதற்கு வேதங்கள் 'பிராயசித்தம்' என்ற வழிமுறையை காட்டுகிறது. ஆன்மிகம் மூலம் அதர்மஞானத்தின் தன்மைகளை அறிந்து, அதிலிருந்து விடுபடுவதற்குரிய வழிமுறைகளை பற்றி வேதங்கள் கூறுகிறது..

புத்தகக்கடைகளில் நாம் ஆன்மீகத்தைப் பற்றிய நூல்களை வாங்கச் சென்றால், நாம் செல்வத்துடன் வாழ்வதற்கு, எந்த கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்ய வேண்டும். எந்தவிதமான பூஜை செய்தால் பணம் நிறைய நமது வீட்டில் கொட்டும். லெட்சுமி நம் வீட்டில் வாசம் செய்வாள். எந்தவிதமான டாலர் வாங்கி கழுத்தில் அணிந்தால் எந்தவிதமான் கல் பதித்த மோதிரம் கை விரல்களில் அணிந்தால் இன்பம் மகிழ்ச்சி ஏற்படும் போன்ற வழிமுறைகளைத்தான் கடைகளில் விற்பனைக்கு வைத்திருக்கும் பெரும்பாலான நூல்கள் எடுத்துச் சொல்லும்.

இப்படிப்பட்ட ஆன்மீக நூல்களால் எந்தவிதமான பயனும் இல்லை என்று கூறமுடியாது. இத்தகைய ஆன்மீக நூல்கள், தங்கள் மனதளவில் தாங்கமுடியாமல் துன்பப்படும் மக்களுக்கு ஒரு மனஆறுதல் தரக்கூடியவை. நம் துன்பங்களிலிருந்து நமக்கு




விடுதலை கிடைக்காவிட்டாலும் அவற்றை தாங்கிக்கொள்ளக்கூடிய மனோசக்தியை கொடுத்து ஒருவிதமான மனஆறுதலை இத்தகைய ஆன்மீகநூல்கள் ஓரளவுக்கு கொடுக்கக்கூடியவை. மேலும் அவை துன்பங்களிலிருந்து நமது மனதை ஆன்மீகச் சிந்தனையில் திருப்பக்கூடியவை என்றும் கூறலாம்.

அதாவது நீச்சல் தெரியாதவன் தண்ணீரில் விழுந்து தத்தளிக்கும்போது அவன் கைக்கு அப்போது ஒரு மிதக்கும் கட்டை கிடைப்பது போன்றுதான் இத்தகைய ஆன்மீக நூல்கள். இதனைத்தான் நம்மில் பெரும்பாலும் ஆன்மீகநூல்கள் என்று தவறாக

எண்ணிக்கொண்டிருக்கிறோம். நமது மனதிற்கு முழுமையாக அமைதி தரக்கூடிய ஆன்மீக நூல்களை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும்.

அறம் பொருள் இன்பம் இந்த மூன்றிலிருந்து வரக்கூடிய, அடையக்கூடிய பொருள்கள் அல்லது செயல்களின் மூலம் நிரந்தரமான இன்பம் சுகமான வாழ்க்கை நமக்கு கொடுக்கவில்லையே என்ற எண்ணங்கள் நமது உள்ளத்தில் இயல்பாக உதயமாக வேண்டும். சிலருக்கு இந்த ஜென்மத்திலோ கடந்த ஜென்மத்திலோ அவர்கள் செய்த புண்ணியத்தின் பலனாக அவர்களுக்கு இந்த உலக இன்ப வாழ்க்கையில் ஒரு சலிப்பு வந்து விடும். அப்போது அவர்களுடைய மனம் நிரந்தரமான இன்பத்தை மகிழ்ச்சியைத் தரக்கூடிய மோட்சத்தினை நாடுவதற்கு ஆரம்பித்து விடுகிறான். பட்டினத்தார், அருணகிரிநாதர், வள்ளலார், ரமண மகரிஷி போன்றவர்கள் இந்த பூமியில் மகான்களாக வந்திருக்கிறார்கள்.

சிலரிடம் மோட்சம் வேண்டுமா என்று கேட்டால் ‘எனக்கு இப்போதைக்கு மோட்சம் வேண்டாம்’ என்று கூறுபவர்களும் நினைப்பவர்களும் உண்டு. அதற்குக் காரணம் இந்த உலக இன்பங்களில் ஈடுபட்டு மூழ்கி, அதிலிருந்து அவர்களால் மீள முடியவில்லை. மேலும் தாங்கள் அனுபவிக்கும் உலக வாழ்க்கையில் காணும் இன்பம் மகிழ்ச்சி நிரந்தரமானது என்று தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதியஞானம் அறிவு போன்றவை இல்லாததால் மோட்சம் இப்போதைக்கு தங்களுக்கு வேண்டாம் என்று கூறுகிறார்கள். நித்தியமான இன்பமே மகிழ்ச்சியே மோட்சத்திற்கு மனிதனை அழைத்துச் செல்வதோடு, அதனை உணரச் செய்து ஆன்மிகம் மனிதனை அமைதிக்கு வழி காட்டுகிறது.

பட்டினத்தார், வள்ளலார், திருமூலர் போன்ற மகான்கள் தங்கள் அனுபவத்தில் கண்டவற்றை தியானத்தின் மூலமாக தவத்தின் மூலமாகவும் மோட்சம் பற்றி விளக்கிக் கூறியுள்ளனர். ‘ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல்’ என்று எளிமையாக வள்ளலார் நமக்கு அறிவுறுத்தியுள்ளார். ஒரு மனிதன் உலகில் அறம் பொருள் இன்பம் இவற்றின் மூலம் பொருள்களை அடைந்து அதன் மூலம் இன்பம் அடைந்தாலும், ஒரு காலகட்டத்தில் மனம் அந்த நிரந்தரமில்லாத குறைபாடுகள் உள்ள இன்பத்தில் மகிழ்ச்சியில் சலிப்படைந்து விடுகிறது.

அப்போது அவர்கள் மனம் நிரந்தரமான குறைவில்லாத மகிழ்ச்சியை ஆனந்தத்தினை, தன்னை மனதளவில் அடிமைப்படுத்தாத சுதந்திரமான ஆனந்தத்தை நாடுகிறது. அதனைத்தான் வேதங்கள் சாஸ்திரங்கள் மோட்சம்

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

என்று விளக்கிக் கூறுகிறது. மோட்சம் மூலம் மனிதன் ஆனந்தத்தைப் பெறத்தான் விரும்புகிறான். அதில் அந்த ஆனந்தத்தில் நிரந்தரமான நித்தியமான துன்பம் கலவாத மகிழ்ச்சி இருக்கிறது என்று வேதங்கள் நன்கு விளக்கிக் கூறுகிறது. வேதங்கள் மோட்சத்தை குறித்து விளக்குவதால் அது வேதாந்தம் எனப்படும்.

நாம் நித்தியமான ஒரு ஆனந்தத்தினை அடைய வேண்டும் என்று முடிவுக்கு வந்து விடவேண்டும். அதில் உறுதியுடன் இருக்க வேண்டும். அந்த நித்தியமான ஆனந்தத்தை அமைதியை நாம் ஏன் விரும்புகிறோம். அநித்தியமான உலக ஆனந்தத்தில் நமது மனம் அமைதியோ திருப்தியோ அடைவது இல்லை. காலம் கடந்துதான் நமக்கு அந்தச் சிந்தனையே வருகிறது. தானதர்மங்கள், யாகம் எனப் பலவிதமான செயல்களில் ஈடுபட்டு, அதன் மூலம் நமக்குக் கிடைத்த இன்பத்தில் நாளடைவில் சலிப்படைந்து விடுகிறோம். எனவே நித்தியமான இன்பத்தை மோட்சத்தை அமைதியை அடைவதற்கு நமது ஆழ்மனம் தீவிரம் காட்டுகிறது. ஆன்மீக வழியில் மனம் அமைதியை நாடுகிறது.

நித்தியமான ஆனந்தத்தினை பிரம்மம் பராமாத்மா என்று வேதாந்தம் கூறுகிறது. ஆனந்த சொரூபமே பிரம்மம் பராமாத்மா என்று வேதங்கள் உபநிடதங்கள் எல்லாம் கூறுகிறது. உலகில் நாம் காணும் பஞ்சபூதங்கள் எல்லாம் நித்யானந்தம் ஆகும். பஞ்சபூதங்களின் இயல்புகளெல்லாம் நிரந்தரமானது. எக்காலத்திலும் மாறாதது. எடுத்துக்காட்டாக நெருப்பை எடுத்துக் கொண்டால் அதன் தன்மை உஷ்ணம் ஆகும். அது எந்த வடிவத்திலும் எங்கு இருந்தாலும் எக்காலத்திலும் அதன் உஷ்ணத்தன்மை மாறாதது.

நெருப்பு அடுப்பில் விறகாக எரிந்தாலும், நெருப்பு அகல் விளக்கில் தீபமாக எரிந்தாலும் அதன் உஷ்ணம் மாறுவதில்லை. நீர் குளத்தில் இருந்தாலும் ஆற்றில் நீராக ஓடினாலும், மலையருவியாக கொட்டினாலும், அதன் குளுமைத்தன்மை மாறுவதில்லை. உலகில் காணும் பஞ்சபூதங்களின் தன்மை எக்காலத்திலும் எந்த வடிவில் எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் மாறுவதில்லை. நமது லட்சியம் நித்தியானந்தம்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

அடைவது. அதாவது பிரம்மத்தை அடைவது ஆகும். பிரம்மம் என்றால் நித்யானந்தம். இந்த நித்யானந்தம் நம்மிடம் நம்மையும் அறியாமல் இருந்து கொண்டுதான் இருக்கிறது. நாம் உலகில் காணும் அநித்தியமான இன்பத்தில் மூழ்கி விடுவதால் நித்யானந்தத்தை உணராமல் இருக்கிறோம். எனவே அதிலிருந்து விடுபடமுடியாமல் உலக இன்பத்தில் மூழ்கி இருப்பதாலும் நித்தியானந்தத்தின் தன்மையை நாம் அறியாமல் இருக்கிறோம்.

மனிதன் ஒரு பொருளை அடையவதால் கிடைக்கும் இன்பத்தை மகிழ்ச்சியை இரண்டு விதங்களில் இழக்கலாம். ஒன்று இன்பம் தரக்கூடிய அந்தப் பொருள் நம்மிடம் இல்லாதது. இரண்டு அந்தப்பொருள் நம்மிடம் நம்மை அறியாமல் இருந்தும் அதனை அறிந்து கொள்ளாததாலும், உணர்ந்து கொள்ளாததாலும் அந்த இன்பத்தை இழக்கலாம். எடுத்துக்காட்டாக ஒரு பெரிய அறையில் நாம் கூட்டமாக அமர்ந்து இருக்கிறோம். அந்த அறையில் திடீரென்று மின்விளக்கு அணைந்து அந்த அறையானது இருளில் மூழ்கி விடுகிறது. நாம் அனைவரும் அந்த அறையில்தான் இருக்கிறோம் என்று நமக்குத் தெரிகிறது. ஆனால் நாம் அனைவரும் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து தெரிந்து கொள்ள முடிவதில்லை.

காரணம் ஒருவரை ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதற்கு வெளிச்சம் இல்லாமல் இருளில் இருப்பதால் தெரிவதில்லை. ஆனால் நாம் அங்கு சேர்ந்து கூட்டமாக அமர்ந்து இருப்பதை உணர்கிறோம். அதுபோல்தான் நம்மிடம் நித்திய சொரூபமான பிரம்மம் நம்மிடமே இருக்கிறது. உலகம் என்னும் மாயை இருளில் நாம் மூழ்கியிருப்பதால் பிரம்மத்தை நித்யானந்தத்தை அறியாமல் இருக்கிறோம். அந்த மாயை நம்மை விட்டு நீங்கினால் நித்யானந்தமான பிரம்மத்தை அறியலாம். அதாவது உலக மாயை என்னும் இருள் நம்மிடமிருந்து விலகினால், நாம் விரும்பும் தேடும் மன அமைதியை அடையலாம். .

(அமைதி தொடரும்)


**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

ஆன்மிகம், வாழ்வியல், பொருளாதாரம், வியாபாரம்,
தொழில், கலை, அறிவியல், மொழிபுலமை, கட்டிடக்கலை,
மருத்துவம், ஜோதிடம், விஞ்ஞானம், போன்றவற்றை
உலகிற்கு அறிமுகப்படுத்தி, சூரிய உதயத்தை கணித்து,
சித்திரையின் துவக்கத்தை கண்டறிந்து,
உலகிற்கு ஒளி தரும் சூரியனை மையப்படுத்தி, வருடத்தை
பிரித்து, வருடத்தின் முதல் மாதமாக சித்திரையை
நிர்ணயித்து, அதை தமிழர் பண்டிகையாக கொண்டாடிய
முன்னோரை வாழ்த்தி வணங்குவோம்,

## சித்திரையை வரவேற்போம்

# சித்திரைத் திருநாள் வாழ்த்துக்கள்



9444228203

Google Play aanmeegamalar